பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 27 சனிக்கிழமை 12.08.2023 கதிர் 274

# 13இன் நடைமுறைப்படுத்தல் மறைமுகத் தமிழீழமேதான்

## அதற்கு இடமளிக்க முடியாது என்கிறார் முன்னாள் இராணுவ அதிகாரி ஜகத் டயஸ்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக முழுமையான அதிகாரங்களை வழங்க முயற்சிப்பது மறைமுகமாகத் தமிழீழத்தை வழங்குவதாக இருக்குமென ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான லெப்டினட் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித் துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கம் தொடர்பில் அவர் சிங்களச் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டுக்காக உயிர்களைதியாகம்செய்த படையினரை மாத்திரமல்லாது, மக்களைகாட்டிக்கொடுக்கும்செயலாகும்.

தற்போது இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இராணுவத்தினரை குறைத்து, வரலாற்று சிறப்புமிக்க தொல்லியல் உரிமைகள் அழிக்கப் படுகின்றன.

பெற்றுக்கொள்ள முடியாது போன தமிழீழத்தை 13ஆவது திருத் ☞2

## இது ரகசியம் அல்ல!

அரகலயபோராட்டத்தின்மூலம்கோட்டாபய ராஜபக்ஷவைப்பதவியிலிருந்து அகற்றி ஒரு வருடம்தான் ஆகியிருக்கின்றது. ஆனால், அதற்குள்ராஜபக்ஷ குடும்பத்திற்குள் இருந்து மற்றொருவரை மீண்டும் அரியணை ஏற்றும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதற்கான அடித்தளம் மெல்ல மெல்ல இப்போதே இடப்படத் தொடங்கியிருக்கிறது.

ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து ஒருவரை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கான இந்த முயற்சியை நன்கு திட்டமிட்டு படிப்படியாகச் செயற்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். கடந்த சில வாரங்களாக பொதுஜன பெரமுன கட்சியை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன. அரகலய போராட்டத்தின் பின்னர் கட்சியின் பெயர் சொல்லவும், கட்சியின் பெயரால் அரசியல் பேசவும் பயந்து ஒடுங்கிப் போயிருந்தவர்கள், அடுத்த தேர்தல் வரப்போவதற்கான அறிகுறிகள் தொன்படத் தொடங்கியதும். கட்சியின் இளம் முகமான நாமல் ராஜபக்ஷவை முன்னிறுத்தி கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டன.

எதிர்பார்த்ததற்கு மாறாக அந்தப பணிகள் நல்லபடி இடம்பெற்றது. கட்சியின் கிராம மட்ட அமைப்பாளர்கள் உறுப்பினர்கள் கட்சியை நிராகரித்துவிட்டு ஓடியிருப்பார்கள் என்று கருதப்பட்ட நிலையில் ☞2

## 14 வகை மருந்துகள் தருவிக்கப்பட்டன

பற்றாக்குறை நிலவிய 14 வகையான மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிப்பில் "நாட்டில் நிலவிய மருந்து பற்றாக்குறை 242ஆக குறைவடைந்துள்ளது. இந்தியக் கடனுதவித் திட்டத்தினூடாக நூற்றுக்கும் அதிக மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த மாதத் திற்குள் இந்த மருந்துகள் நாட்டிற்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது" என்றுள்ளது.

### கெஹலியவுக்கு எதிரான

## நம்பிக்கையில்லா தீர்மான வரைவு மீது செப்டெம்பல் முதல் வாரம் விவாதம்

சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான வரைவு மீதான விவாதம் செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் இடம் பெறவுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தின் போது இது தொடர்பாகத் தீர்மானம் எட்டப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அண்மையில், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி 45 பேரின் கையெப்பத்துடன் கையளித்தது.

தரமற்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பொறுப்பற்ற முறையில் இறக்குமதிசெய்து சுகாதாரத்துறையைப் பல வீனப்படுத்தியுள்ளதோடு நோயாளிகளின் உயிரிழப்பிற்கு காரணமாக இருந்தமைக்காக சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக் கப்படுவதாக எதிர்க் கட்சி தெரிவிக்கின்றது.

## மக்களுக்காக ஒன்றிணைவோம் எம்.பிக்களுக்கு ஜீவன் அழைப்பு

'மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்என்பதில்ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கமிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றார். எனவே, மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்நாடாளுமன்ற உறுப்பினர்கள்தமதுவறட்டுக் கௌரவத்தை விட்டு விட்டு இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போதுதான் மாற்றமொன்று வரும்.'

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன்தொண்டமான்தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும்அமைச்சருமானஜீவன்தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும் எம்.பியுமான மருதபாண்டி ராமேஷ்வரன், இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பின்பின்னர்செய்தியாளர்களிடம்பேசியஅமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம். இந்தியாவின் 3 ஆயிரம் மில்லியன் ரூபாவைஎப்படிப்பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைத்திருந்தோம்.

அத்துடன்,காணிஉரிமை பற்றியும் கதைக்கப்பட்டது. இதற்கான பொறுப்பு எனக்கும், அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ☞2

## மலையக எழுச்சிப் பயணத்தில் முன்னாள் தேர்தல் ஆணையரும்



மலையகமக்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை முன்னெடுக்கப்பட்டு வரும் மலையக எழுச்சி நடை பயணத்துக்குத்தேர்தல்கள்ஆணைக் குழுவின்முன்னாள்தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவும் ஆதரவு வழங்கியுள்ளார்.

தம்புள்ளையில் இருந்து நேற்று காலை தொடங்கிய பாதயாத்திரையில்பங்கேற்று அவர் தமது ஆதரவை வெளிப்படுத்தினார்.

மலையகத் தமிழர்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்படவேண்டும், ☞2

## முன்னாள் எம்.பி. ஸ்ரீ ரங்காவுக்கு நவம்பர் 6 வரை விளக்கமறியல்



முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்ஜே.ஸ்ரீரங்காவை எதிர்வரும் நவம்பர் 6 வரை விளக்கமறியலில் வைக்குமாறுவவுனியாமேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து வழக்கு ஒன்றின் சாட்சியத்தை அச்சுறுத்தியசம்பவம் மற்றும் விபத்து ☞2

## விளையாட்டுத் துறைக்கான பல்கலையை நிறுவ முடிவு

விளையாட்டுத் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கு இன்றைய ஆட்சிதிட்டமிட்டுள்ளதுஎன்று, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகாரஇராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இளைஞர்கள் தொடர்பில்பெரும்எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார். அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அதன்படி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்செயற்பாடுகளை பிரதேசரீதியில்செயற்படுத்த ஒவ்வொருபிரதேசசெயலகப் பிரிவுகளிலும் ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அதன் மூலம் இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும்,தேசியஇளைஞர் படையணி ஊடாகவும் பல்வேறுசெயற்பாடுகள்முன்னெடுக்கப்படுகிறது, முக்கியமாக இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுக்கு திறன்விருத்தி, தகவல் தொடர்பாடல்தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள், சர்வதேச மொழிகளைக் கற்றுக்கொடுத்தல் மற்றும் சர்வதேச அளவில் சிறந்த வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களும்வழங்கப்படுகிறது.

தேசிய ரீதியில் மத்திய அரசுக்கும் மாகாண விளையாட்டுத் துறைக்கும் இடையில் நிலவக்கூடிய முரண்பாடுகள் மற்றும் நிர்வாக சிக்கல்களைத் தீர்க்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம்மத்திய, மாகாணஎன்ற வேறுபாடுகள் இன்றி ☞2

## விவசாய சிக்கல்களை தீர்க்க புதிய செயலணி உருவாக்கம்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந்தோட்ட, நீர்பாசன, மாகாவலி அபிவிருத்தி அமைச்சுக்களை இணைத்து தனியார் துறையின் பங்கெடுப்புடன் அச்செயலணியை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

'விவசாயத்துறை நவீனமயப்படுத்தல்' தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றசந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

விவசாயநவீனமயப்படுத்தலுக்கானசெயலகமொன்றை உருவாக்குவதற்கானவரைவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை இரு வாரங்களுக்குள் அதிகாரிகள் தரவேண்டும். தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக நாடாளுமன்ற குழுவை நியமிக்க முடியும்.

விவசாயம் இந்நாட்டு பொருளாதாரத்தின் முக்கிய அங்கம். அதனை ☞2

## சபாநாயகரின் முடிவை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த முடியாது என்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தீர்ப்புக்கு எதிர்க் கட்சிகள் சபையின் போர்க் கொடி தூக்கின.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சபாநாயகரின் தீர்மானம் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்ச்சையில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சஜித் பிரேமதாச சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தீர்ப்பு பாராளுமன்றத்தின் தீர்ப்பே நீதிமன்றத்தின் தீர்ப்பாக அமைய வேண்டும் என்றபயங்கரமானநிலைமை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்

அத்துடன், உள்நாட்டு கடன்மறுசீரமைப்பைநீதிமன்றில் சவாலுக்குட்படுத்த முடியாது என்ற சபாநாயகரின் தீர்ப்பின் மூலம் நாடாளுமன்றத்தின் தீர்ப்பே நீதிமன்றத்தின் தீர்ப்பாக அமைய வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ☞2

## இயக்கர் குல சிங்கள மன்னனே இராவணன்

### புதுப் புரளியைக் கிளப்பிவிட்ட சரத் வீரசேகர எம்.பி.

இராவணன் மன்னன் இயக்கர் குலத்தை சேர்ந்த சிங்களவர். இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக் கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இராணவன் மன்னன் தொடர்பாக முறைசார்ந்தஆய்வொன்றை நடத்துவதற்காக, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன முன்வைத்த தனிநபர்பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராணவன் இந்தியாவுக்கு விமானத்தில் சென்று சீதாவை கடத்தி வந்ததாக குறிப்பிட்டால் பெரும்பாலானோர் நம்புவதில்லை. எமதுவரலாற்றில் இன்றும் உயிர் துடிப்பாக உள்ள விடயங்கள் வியப்புக்குரியவையாக உள்ளன.

மன்னராட்சிக்காலத்தில் சிங்களப்பொறியியலாளர்கள் வாழ்ந்துள்ளார்கள்என்பதற்கு வரலாற்று சின்னங்கள் மற்றும்தொல்பொருள் ☞2

## இனி இது .....

அவர்களில் பலரும் கட்சி நடவடிக்கைககளுக்குத் திரும்பியிருந்தனர். இது தந்ததுணிபு, உற்சாகத்தோடு அடுத்தராஜபக்ஷவைக்களம் இறக்குவதற்கானமுயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கொழும்பில்நேற்றுச்செய்தியாளர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, மொட்டுக்கட்சியின்ஜனாதிபதி வேட்பாளர் மூன்று எழுத்தில் பெயர் கொண்டவர் என்று தெரிவித்திருக்கிறார். பொருத்தமானநேரத்தில்அந்தவிவரங்கள்வெளியிடப்படும்என்றும் தெரிவித்திருக்கிறார். பஸில், நாமல், சமல்என்றுராஜபக்ஷ குடும்பத்தில் பலரும் மூன்றெழுத்துப் பெயர்களுடன் இருக்கும் நிலையில், பஸிலின் தீவிர விசுவாசியான ரஞ்சித் பண்டார இதனைத் தெரிவித்திருப்பது பல எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதற்கிடையில், கடும் சர்ச்சையைஏற்படுத்திவரும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் மொட்டுக் கட்சித் தலைவர்கள் எந்தக்கருத்தையும்வெளிப்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. நாடாளுமன்றத்திலும் ஊடகங்களிலும் கட்சித் தலைவர்கள் ஏற்கனவே 13க்கு ஆதரவு தெரிவித்துக் கருத்துரைத்திருக்கிறார்கள். ஆனால், தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, உதயகம்பன்பில போன்றவர்கள் 13க்கு எதிராகத் தெரிவித்துவரும் கருத்துக்கள் சிங்கள மக்களிடம்ஏற்படுத்தும்தாக்கத்தை அடுத்து, இந்த விடயத்தில் எந்தக்கருத்தையும்தெரிவிக்காதுமௌனம்காப்பதுஎன்று மொட்டுக் கட்சித் தலைமை தீர்மானித்திருக்கிறதாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13இன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தச் சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொடுக்க இடமளிக்க முடியாது - என்றார்.

## மக்களுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத்தில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள 44 ஆயிரம் வீடுகளுக்குக் காணி உரித்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குசம்பளஉயர்வு அவசியம் என்ற விடயமும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இது நிரந்தரத் தீர்வு அல்ல எனவும், மக்களுக்கு உரிய வருமானம்கிடைப்பதற்கான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் நாம் சுட்டிக்காட்டினோம்.

நாட்டில் பல மாவட்டங்களில் மலையக மக்கள் வாழ்கின்றனர். சில பகுதிகளில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, சிங்கள எம்.பிக்கள் உள்ளடங்கலாக அனைத்து மலையக எம்.பிக்களையும் பேச்சுக்கு அழைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை ஒரு திட்டவரையாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்போம். ஏனெனில் விவாதத்தில் உரையாற்றிய அனைவரும் மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்தனர்.

'மலையகம் - 200' நிகழ்வுதவறெனசிலர் கருதினால், நடைபயணமும் தவறுதான். மலையக மறுமலர்ச்சிக்காகக் குழுவொன்றை அமைத்துள்ளோம். சுயாதீனமானவர்கள் அதில் உள்ளனர். மலையக மக்களுக்காகத் தமது வறட்டுக்கௌரவத்தை விட்டு மேம்பாட்டுத் திட்டங்களுக்குஒத்துழைப்புவழங்க மலையகத் தலை வர்கள் முன்வரவேண்டும்-என்றார்.

## இயக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னங்கள்எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இவ்வாறான நிலையில் இராவணன் விமானத்தில் சென்று சீதாவை கொண்டுவந்ததாக குறிப்பிடுவதை மறுக்க முடியாது என்று குறிப்பிடுகிறேன்.

இராவணன் மன்னன் இயக்கர் குலத்தை சேர்ந்த சிங்களவர். இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக்கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள். தமிழ் பூர்வீகம் என்பது பொய் என்பதை எடுத்துரைக்கும் வகையில் இலங்கையில் சின்னங்கள் காணப்படுகின்றபோது இராணவனைதமிழர்என்று குறிப்பிடுவதையிட்டுவெட்கப்படவேண்டும்.

மகாவம்சத்தில் இராணவன் சிறந்த தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இராவணனின் படை கொடியில் சிங்கம் சின்னம் உள்ளது. இந்தியா இராவணன் மீது இன்றும் அச்சம் கொண்டுள்ளதால்தான் வருடாந்தம் அவரது உருவத்தை எரிக்கிறார்கள். ஆகவேஇராணவன் சிங்கள தலைவர் - என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான வழக்கில் முன்னிலையாகத் தவறிய குற்றம் ஆகியவற்றுக்காக வவுனியா உயர்நீதிமன்றம் ஜே.ஸ்ரீரங்காவை கைது செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, மார்ச் 17 ஜே.ஸ்ரீரங்கா கைது செய்யப்பட்டிருந்தார். களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

2011மார்ச்30, சந்தேகத்திற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் பதிவுசெய்யப்படாத ஜீப்பில் மதவாச்சியிலிருந்துசெட்டிகுளம்நோக்கி பயணித்தபோது, செட்டிகுளம் வைத்தியசாலைக்குமுன்பாக விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் அலவ்வ, நவத்தல்வத்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான உத்தியோகத்தர்ஜி.உதயஜயமினி புஷ்பகுமார என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகஸ்தரே காரை செலுத்திச் சென்றதாக தெரிவித்து விசாரணைகள் முடிந்ததாக நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், விபத்து தொடர்பில் உயிரிழந்த சார்ஜன்ட் மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸ்விசேடபுலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்ஜே.ஸ்ரீரங்காவிபத்தை ஏற்படுத்தியமை தெரிய வந்தது.

இதனையடுத்து சட்டமா அதிபர் வவுனியா மேல் நீதிமன்றில் 11 குற்றச் சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்திருந்திருந்தார். இதுகுறித்தகுற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

வழக்கு நடைபெற்ற காலத்தில் நீதிமன்ற விசாரணையில் சாட்சிய மளித்த இருவருக்கு தொலைபேசிமூலம்அழுத்தம்கொடுத்தார் என்று பொலிஸார் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தினர். அதுதொடர்பிலான விசாரணை அறிக்கை மற்றும் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

ஜே. ஸ்ரீரங்கா, 2011இல் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்தவர், செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி உட்பட 6 பேருக்கு எதிராக விபத்தை மறைத்தமை மற்றும் குற்றவாளி தப்பிக்க உதவியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தகவல்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் செட்டிகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றில் ஆஜராகி அனைத்துக்குற்றங்களையும் ஒப்புக்கொண்டார்.

சம்பந்தப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்ட நீதிபதி செட்டிகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதம பொலிஸ் பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவவுக்கு தண்டனை விதித்தார்.

இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாளரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஸ்ரீரங்காவை மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும், சாட்சியத்தை அச்சுறுத்திய சம்பவம் மற்றும் விபத்து தொடர்பானவழக்கில்நீதிமன்றதிற்கு வருகை தராதமை ஆகியவற்றை அடுத்தே உயர்நீதிமன்றம் ஸ்ரீரங்காவைகைதுசெய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி உரிமை அவசியம், பெருந்தோட்டத்தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்பன உட்பட 10 பிரதான கோரிக்கைகளை முன்வைத்து 'மலையக எழுச்சிப் பயணம்' முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2023 ஜூலை 28 ஆம் திகதி தலைமன்னாரில் ஆரம்பமான குறித்த பாத யாத்திரை இன்று 12 ஆம் திகதி மாத்தளையைச் சென்றடையவுள்ளது. நேற்று முன்தினம் (10) ஓய்வு எடுக்கப்பட்டது. நேற்று (11) காலை மீண்டும் யாத்திரை ஆரம்பமானது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், சிவில் அமைப்புகள் மற்றும் மலையக சமூகம்சார் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய 'மாண்புமிகு மலையக மக்கள்' கூட்டிணைவினால் இப்பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## விளையாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரும் ஒன்றிணைந்து இந்நாட்டு விளையாட்டுத் துறையின் மேப்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன்செயற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவிளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்யும்போது இதுவரை பல்வேறு பிரச்சினைகள் தோன்றியது. அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக தற்போதுதேசியவிளையாட்டு சபை நிறுவப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்களாக தற்போது, இந்நாட்டுக்காக சர்வதேச அளவில் தனது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றியீட்டிய முன்னாள் விளையாட்டு வீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசரீதியில்இயங்கும் ஒரு சில விளையாட்டுக் கழகங்கள் பெயரளவில் ஆவணங்களுக்குள் மட்டுப்பட்டு இருக்கிறது, அவ்வாறின்றி உண்மையில்குறித்த பிரதேசங்களில்தனதுதிறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டு வீரர்களை உள்ளடக்கிய கழகங்களை நிறுவி இந்நாட்டு விளையாட்டுத்துறையின்முன்னேற்றத்திற்குப் பங்களிக்க வேண்டும்.

பாடசாலை மற்றும் பிரதேச மட்டத்தில் திறமையுள்ள விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கவும் மற்றும் அவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெறுவதற்கான புலமைப்பரிசில்களை வழங்கப் போதியளவு நிதியின்மை, தற்போது விளையாட்டு அமைச்சு எதிர்கொள்ளும்பெரும்பிரச்சினையாகும். இருந்தபோதும் தற்கால பொருளாதார நெருக்கடியிலும் கூட இயன்றளவில் அவ்வாறான வாய்ப்புகளை இந்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு அமைச்சு வழங்கிவருகிறது.

வெற்றி, தோல்விஎன்பது விளையாட்டில் சகஜம் என்ற வகையில்சர்வதேசஅளவில் பல்வேறுபோட்டிகளில்வெற்றி பெற்றுதாய்நாட்டுக்குவருகை தரும்விளையாட்டுவீரர்களை விமான நிலையம் வரை சென்று பாராட்டிவரவேற்பது போல், போட்டிகளில் தோல்வி அடைபவர்களுக்கும் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஆதரவுவழங்கிஅவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

அரசதுறைமாத்திரமன்றி தனியார் துறையினரும் பிரதேச தரத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுகின்றேன். இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் குறுகிய காலத்தில் இந்நாட்டு விளையாட்டுத்துறையை மேம்படுத்த முடியும்.

மிக முக்கிய விடயமாக, விளையாட்டுப் பல்கலைக்கழகமொன்றை எமது நாட்டில் நிறுவத் திட்டமிட்டப்பட்டுள்ளது அதன் மூலம், வீர, வீராங்கனைகளுக்குவிளையாட்டுதொடர்பான அறிவு மற்றும் பயிற்சி உட்பட விளையாட்டுத்துறையுடன்தொடர்பானஅனைத்து வகையான தெளிவுகளையும் முழுமையாக வழங்க முடிவதுடன் இந்நாட்டு வீரர்களுக்கு சர்வதேச அளவில் மிகப் பெரிய அங்கீகாரம் கிடைக்கும் என்றார்.

## விவசாயப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு அல்லது சில நிறுவனங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது, அரச மற்றும் தனியார் துறைகள் உரிய ஒருங்கிணைப்புடன் விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல்பழமையான முறைமைகளுக்கு மாறாக புதிய முறையில் சிந்தித்து சிறந்தபயன்களைஅடையும் வகையில், விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இதுவரையில் விவசாயத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மாத்திரமே இடம்பெற்றது, அதனால் நாட்டுக்கு எவ்வித பயன்களும் கிடைக்கவில்லை. ஆகவே உரிய முகாமைத்துவத்தின் கீழ் விவசாய திட்டமிடல்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியமாகும்.

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விவசாய அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டதோடு 9 மாகாணங்களிலும் காணப்படும் வளங்களை அதற்காக பயன்படுத்திக்கொள்வதோடு, அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, உரிய அமைச்சுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், ஏனைய ஆய்வு நிறுவனங்களின் நிபுணத்துவ தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அந்தந்தபோகங்களுக்கு ஏற்ற நெல் வகைகளைப் பயிரிடுதல், குறித்த பயிர்கள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து அறிவைப் பெறுதல், தரமான விதைகளை கொள்முதல் செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். நாடு முழுவதும் உள்ள கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சிறு விவசாயிகளுக்கு அவசியமான நவீன தொழில்நுட்பஅறிவைவழங்கும் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அத்துடன், நவீன விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய வேண்டியுள்ளது.

விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு, தனியார் துறை தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்ப்பதன் மூலம் அதிக நன்மைகளைப்பெறமுடியும் என்பதுடன், நிலையான விவசாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடையும் வகையில் இந்த பணிகளை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், முறையான நீர் முகாமைத்துவத்தை பராமரிப்பது முக்கியமாகும் -என்றார்.

## சபாநாயகரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருக்கிறது.

அது பயங்கரமான நிலைமையாகும். ஏனெனில் அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் பிரதான தூண்களான நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றம் மற்றும் நீதிமன்றம் ஆகியன சுயாதீனமான தூண்களாகும். ஒன்றை ஒன்று அதிகாரம் செலுத்த முடியாது.

ஆனால் சபாநாயகரின் தீர்மானத்தின் மூலம் எமது நாட்டு சபாநாயகர் ஜனாதிபதியின் முகவராக இருந்து நாடாளுமன்ற தீர்மானத்தை நீதிமன்றத்துக்கு பாதிப்பாக தீர்ப்பு வழங்கி இருப்பது நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தெளிவாகிறது.

இதுபிழையான முறை. நீதிமன்ற நீதிபதிகளை அழைத்து விருந்துபசாரம் வழங்குவதன் மூலம் ஜனாதிபதிக்கு தேவையான முறையில் அவர்கள் தீர்ப்பளிப்பார்கள் என நினைக்க வேண்டாம். அதனால் இந்த ஆட்சி இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை வருடங்களே இருக்கும் அது நிச்சயமாக மாற்றமடையும்.

அதனால் சபாநாயகர், சபாநாயகர் பதவியை அளெகரவப்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது. எனவே நீதிமன்றத்தை அடக்கும் வகையில் வழங்கிய தீர்ப்பை சபாநாயகர் மீள பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

**லக்ஷ்மன் கிரியெல்ல**

அவரைத் தொடர்ந்து, எழுந்தஎதிர்க்கட்சியின்பிரதம கொரடாலக்ஷ்மன்கிரியெல்ல, அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்துடன்செய்து கொண்டுள்ள கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரதேவையில்லை. ஆனால்இந்தஆட்சிஇதனை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்து, அதற்கு வாக்கெடுப்பு நடத்தி, இறுதியாக, இது தொடர்பாக யாருக்கும்நீதிமன்றம்செல்ல முடியாது என சபாநாயகரின் கட்டளைஒன்றையும்பெற்றுக் கொள்ளப்பட் டிருக்கிறது. இதுதான் ஆட்சியாளர்களின் நோக்கம்.

இந்த ஆட்சிக்கு ஏதாவது பிரேரணை ஒன்றை கொண்டுவரதேவையெனில், அதனை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, அனுமதியை பெற்றுக் கொண்டு, யாராவது அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முற்படும்போது, அதனை தடுப்பதற்கு சிறுப்புரிமை பிரச்சினை ஒன்றை ஏழுப்பி, சபாநாயகரிடம் கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்வார்கள்.

இதுதான் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் தொடர்பிலும் இடம்பெற்றது. இதற்கு முன்னர் இருந்த ஆட்சிகள் 16 தடவைகள் சர்வதேச நாணயநிதியத்துக்கு சென்றிருக்கின்றன. ஆனால் ஒரு தடவைகூட இதுதொடர்பான ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்ததில்லை. அதனால் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை தடுப்பதற்கு செய்தபெரும்துராகேமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன்செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களைநாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியும் என்றால் அரசமைப்பில்

தொடர்ச்சி 11ம் பக்கம்...




காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தவில்லை

## அமைச்சர் அநுராத கூறுகிறார்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 40 பேர் மட்டுமே சிறைச்சாலைகளில் உள்ளார்கள் என நீதிமன்ற, சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்கஅமைச்சர்அநுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சந்தேக நபர்கள் மற்றும் நீதிமன்றங்களால்தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் என தற்போது 28 ஆயிரத்து 468 சிறைக்கைதிகள் சிறையில் இருக்கின்றனர்.

இவர்களில் 50.3 வீதமானவர்கள் போதைப்பொருள் சம்பந்தமான குற்றத்துக்காக தண்டனை பெற்றவர்கள்.

போதைப்பொருள் குற்றங்கள்தொடர்பில்தண்டனை பெறும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு தண்டைனைகளை வழங்குவது மாத்திரம் போதைப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

இவர்களுக்குத் திறன்விருத்தி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாகப் புனர்வாழ்வளிப்பது அவசியமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமே அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து விடுதலையானதும் மீண்டும் அதே தவறைச் செய்வதைத் தடுக்க முடியும்.

அரசாங்கம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகமானவர்களை சிறையில் அடைத்து வருவதாக சிலர் கூறுகின்றனர்.

ஆனால், தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் சுமார் 40 பேரே இருக்கின்றனர்.

சிறைக்கைதிகளுக்கு முறையாக உணவு வழங்கப்படுவதில்லை என்று ஒரு சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.



தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியிலும் சிறைக்கைதிகளுக்கு உணவு வழங்க மாத்திரம் அரசாங்கம் 3.9 பில்லியன் ரூபா நிதியை செலவிடுகிறது.

சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் சிறைக்கைதிகளுக்கே இடவசதி இருக் கின்ற போதிலும், தற்போது சுமார் 29 ஆயிரம் கைதிகள் இருக்கின்றமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது.

இதனால், பாரிய குற்றவியல் குற்றங்கள் இன்றி, சிவில் குற்றங்களுக்கு குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு தொகையினரை வீட்டுக் காவலில் தடுத்துவைக்கும் திட்டம் தொடர்பாக ஆலோசித்து வருகிறோம்.

சிறைக்கைதிகளையும் நாட்டுக்குபயன்மிக்கவர்களாக மாற்றும் வகையில் மேலும் பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அந்த வகையில் சிறைச்சாலைக்குள்ளே உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய தொழிற்சாலைகளை நிறுவுவது தொடர்பாகக்கலந்தாலோசித்து வருகிறோம்.

தனியார் துறையின் பங்களிப்புடன் இந்தப் பணியை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு தருவதாகக்கூறி பண மோசடி

## மக்களுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பில், டுபாய் நாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக 150 பேரிடம் சுமார் 2 கோடி ரூபா பணத்தை வாங்கி ஏமாற்றிய போலி முகவர் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தநபர், காத்தான்குடி நாவற்குடா பகுதியில் அவரது உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்தபோது, குறித்த வீட்டை பாதிக்கப்பட்டவர்கள் முற்றுகையிட்ட நிலையில் அங்கு பதற்றமானதொரு சூழ்நிலையும் ஏற்பட்டது.

இதன்போது, பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் போலி முகவரை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் பிரபல நிறுவனம் ஒன்றின் சந்தைபடுத்தல் குழு தலைவர் என்ற போலி அடை யாள அட்டையொன்றை காண்பித்தே பொது மக்களிடம் பணத்தைப் பெற்று ஏமாற்றியுள்ளார் என்று தெரிய-வந்துள்ளது.

இந்த அடையாள அட்டையைக் காட்டி டுபாய்க்கு குறித்த நிறுவனத்தின் அனுசரணையுடன் குறைந்த செலவான 2 லச்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வேலைக்கு அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சின்ன ஊறணியைச்சேர்ந்த 40 பேர் குறித்த போலி முகவரிடம் ஒருவருக்குதலா ஒருலச்சத்து 20 ஆயிரம் ரூபா வீதம் 48 லட்சம் ரூபா பணத்தை சட்டத்தரணி ஊடாகஒப்பந்தம் செய்துகொண்டு பணத்தை வழங்கியுள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சி முளங்காவில், மட்டக்களப்பு, கல்லடி, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, கொக்குவில் உட்பட பல்வேறுபட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் உட்பட 150 இற்கும் மேற்பட்டவர்களும் குறித்த போலி முகவரிடம் பணம் வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு கூட்டுறவு சங்கக் கட்டட மண்டபத்தை ஒருநாள் வாடகைக்கு எடுத்து அங்கு அனைவரையும் வரவழைத்து அவர்களின் ஆவணங்களைபரிசோதனை செய்து ஒரு போலி ஒப்பந்தம் செய்துகொண்டு, முதலில்ஒரு லட்சத்து20ஆயிரம்ரூபாவை முற்பணமாக செலுத்துமாறும் மிகுதியை வெளிநாடு சென்றதும் தரவேண்டும் எனத் தெரிவித்தும் 3 வங்கி கணக்குகளை வழங்கி அதில் பணத்தை வைப்பு செய்யுமாறு குறித்த முகவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பலர் குறித்த வங்கி கணக்கில் பணத்தை வைப்பு செய்ததுடன் சிலர் நேரடியாக போலி முகவரிடம் பணத்தைக் கொடுத்துள்ளனர்.

எனினும் பணத்தை கொடுத்து 7 மாதங்களாகியும் டுபாய்க்கு அனுப்பாது இவர் ஏமாற்றி வந்த நிலையில், டுபாயில் உள்ள பிரதான நிறுவனம் தன்னை ஏமாற்றி விட்டது என குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே பாதிக்கப்பட்ட 60 இற்கும்மேற்பட்டோர் குற்றவிசாரணைண பிரிவு காரியாலயத்தின் முன்பாக ஒன்று கூடி குறித்த நபரை கைது செய்யுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், ஒருகுழுவினர் முகவரின்நாவற்குடாவீட்டை முற்றகையிட்டு அவரை பிடித்துகொண்டு பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் சுமார் 150 இற்கு மேற்பட்வர்களிடம் 2 கோடி ரூபாவுக்குமேல்மோசடி செய்-துள்ளார்எனப்பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஆயுள்வேதம் (திருத்தம்) சட்டமூலத்திற்கு மக்களின் கருத்துக்கணிப்பும் அவசியம்

## உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிப்பு

அரசமைப்பின்121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட ஆயுள்வேதம் (திருத்தம்) எனும் சட்டமூலம் விசேட பெரும்பான்மை வாக்குகளுடனும் மக்கள் தீர்ப்பொன்றின்மூலமும்மாத்திரமே நிறைவேற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட ஆயுள்வேதம் (திருத்தம்) எனும்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகபிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ வியாழக்கிழமை நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார்.

அதற்கமைய ஆயுள் வேதம்(திருத்தம்)எனும்சட்ட-மூலம் அரசியலமைப்புடன் இணங்குகின்றதாஇல்லையா என்பது பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(1) சட்ட மூலத்தின் 2, 3, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 39, 40 மற்றும் 41 வாசகங்கள் அரசியலமைப்பின் 9 ஆம் உறுப்புரையுடன் முறணாவதுடன் 84 ஆம் உறுப்புரையின்(2)ஆம்பந்தியின்கீழ்தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளுடனும் மற்றும் 83 ஆம் உறுப்புரையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலமும் மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

சட்ட மூலத்தின் 2, 3, 27, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 39, 40 மற்றும் 41 ஆம் வாசகங்களில் 'ஆயுர்வேத பைசஜ்ஜக' மற்றும் 'பைசஜ்ஜக' ஆகிய சொற்களை நீக்குவதன் மூலம் திருத்தம் செய்தால் முரண்பாடு நீங்கும்.

(2) சட்டமூலத்தின் 46(4) ஆம் வாசகம் அரசமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரணாவதுடன் 84 ஆம் உறுப்புரையின்(2)ஆம்பந்தியின்கீழ்தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும். உயர்நீதிமன்ற தீர்மானத்தின்53ஆம்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தங்களைசட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(3) சட்டமூலத்தின் 11(3) ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 ஆம் உறுப்புரையின்(2)ஆம்பந்தியின்கீழ்தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

உயர்நீதிமன்ற தீர்மானத்தின் 54 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தங்களைசட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(4) பிரதான சட்டத்தை திருத்துவதற்கு எதிர் பார்க்கப்படும் ஏனைய விடயங்களில், பிரதான சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் (உ) மற்றும் (ஊ) உப பிரிவுகள் நீக்கப்பட்ட சட்டமூலத்தின் 13 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெருபான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

பிரதான சட்டத்தின் 13(1) ஆம் வாசகத்தின் (உ) மற்றும் (ஊ) உப பிரிவுகளை நீக்காவிட்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

(5) சட்டமூலத்தின் 24(1)(அ), 25 மற்றும் 46(2) ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவையான விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவ் வாசங்களை நீக்கு வதன் மூலம் முரண்பாடு நீங்கும் மற்றும் (6) சட்டமூலத்தின் 46(1) ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதுடன் 84 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் தேவையான விசேட பெரும்பான்மை வாக்குகளினால் மாத்திரமே நிறைவேற்றிக் கொள்ள முடியும். உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தின் 55 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள திருத்தங்களைசட்டமூலத்தில் மேற்கொண்டால் இந்த முரண்பாடு நீங்கும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென பிரதி சபாநாயகர் கட்டளையிட்டார்.



# உதைபந்தாட்டத் தொடரில் சாதனையாளர் கௌரவிப்பு







வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்த மன்னார், இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு வியாழக் கிழமை இடம் பெற்றது.

வடமாகாண படசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்த மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை வீரர்களை கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ.கே. வொலன்ரைன் கலந்து கொண்டார்.

இதன்போது சாதனை வீரர்கள் பவனியாகபாடசாலைவரைஅழைத்து வரப்பட்டு வாத்திய இசையுடன் பாடசாலை மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சாதனை படைத்த மாணவர்களுக்கு விருந்தினர்களால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பரிசில்களும் வழங்கப்பட்டன.

வடமாகாண பாடசா லைகளுக்கிடையே நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியாழ், ஹாட்லி கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வந்த நிலையில் வியாழக்கிழமை நிறைவடைந்தது.

வடமாகாண கல்வி திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த இந்த உதைபந்தாட்ட போட்டியில்வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 39 பாடசாலை அணிகள் கலந்து கொண்டிருந்தன.

இறுதிச் சுற்றில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாட சாலை அணியும், மன்னார் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய அணியும் மோதிக்கொண்டன.

இதன் போது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியை எதிர்கொண்டிருந்த இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுதேசியமட்ட போட்டியில் விளையாடுவதற்குரிய வாய்ப்பை பெற்றுள்ளது.

25 வருடங்களின் பின்னர் மன்னார் மாவட்டத்தில் 18 வயதுப்பிரிவு ஆண்கள் உதைப்பந்தாட்டத்தில் வரலாற்றுச்சாதனைபடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வறட்சி காரணமாக சுமார் ஒரு லட்சம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் வறட்சியால் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, இரத்தினபுரி, பதுளை, குருநாகல் மற் றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் 30 ஆயிரத்து 862 குடும்பங்களைச் சேர்ந்த 99 ஆயிரத்து 594 பேர் நிலவும் வரட்சியான காலநிலையால் குடிநீர்பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும்ஒக்ரோபர்மாதம்வரைபோதிய மழை பெய்யாது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இலங்கையில் போதிய மழை வீழ்ச்சி பதிவாகாத காரணத்தினாலேயே வரட்சியான காலநிலை நீடிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிக மழைப்பொழிவு பதிவாகும் என்று எதிர்ப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மிருக வதை சட்டத்தின் கீழ் மூவர் கிளிநொச்சியில் கைது

*கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் பகுதியில் 20 கால்நடைகளைப் பார ஊர்தி ஒன்றில் கொண்டு சென்ற மூவரைப் பொலிஸார் மிருகவதைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். அத்துடன் குறித்த கால் நடைகளையும் பொலி-ஸார் மீட்டுள்ளனர்.*

*உரிய கால் நடை வைத்தியரின் அனுமதி பத்திரம் இன்மை, கால்நடைகளுக்கான உணவு மற்றும் சுகாதாரவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை,உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களைப் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கைதிகளும் மனிதர்களே!

சிறைச்சாலைகளில் அளவுக்கதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டு உடனடித் தீர்வுகள் காண்பதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரம் தடுத்து வைப்பதற்கும் போதுமான வசதிகள் இருக்கின்றபோதும் தற்போது சிறைகளில் 28 ஆயிரத்து 455 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கைதிகளில் பெரும்பாலானோர் போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். அதாவது 60 சதவிதமான கைதிகள் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அதிலும் தண்டனைக் கைதிகளிலும் அதிகமாக விளக்கமறியல் கைதிகளே சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு சிறைச்சாலை, திருகோணமலை சிறைச்சாலை என இரண்டு சிறைச்சாலைகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு சிறைச்சாலையில் 168 கைதிகளையும், திருகோணமலை சிறைச்சாலையில் 112 கைதிகளையும் தடுத்து வைக்க முடியும், ஆனால் தற்போது மட்டக்களப்பு சிறைச்சாலையில் 593 கைதிகளும், திருகோணமலை சிறைச்சாலையில் 347 கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கமைய மட்டக்களப்பு சிறைச்சாலையில் 425 கைதிகளும், திருகோணமலை சிறைச்சாலையில் 235 கைதிகளும் கொள்ளளவை விஞ்சியதாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்து அதிர்ச்சி ஏற்படுத்தினார் அமைச்சர். அதாவது சிறைச்சாலையின் கொள்ளளவையும் விட மூன்று மடங்கு கைதிகள் இந்த இரு சிறைகளிலும் மட்டும் அடைக்கப்பட்டுள்ளார்கள். கொட்டகைகளில் விலங்குகள் அடைக்கப்பட்டிருப்பதற்கு நிகராகவே அவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதைப் புரிந்துகொள்வது கடினமானதல்ல.

சிறைச்சாலைகளில் காணப்படும் இந்த இடப்பற்றாக்குறை குறித்த தகவல்களைத் தெரிவித்த அமைச்சர், நெரிசல்களுக்கு தீர்வு காண அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். அதாவது முக்கிய நகரங்களில் உள்ள சிறைகளை வேறு இடங்களுக்கு மாற்றி இடவசதியை அதிகரித்துக்கொள்வதே அவரது திட்டமான இருந்தது. இது உடனடியாகச் சாத்தியப்படும் திட்டமல்ல. குறிப்பாக பொருளாதார நெருக்கடியான இன்றைய சூழலில் புதிய சிறைகளை அமைப்பது என்பது நடக்கக்கூடிய காரியமல்ல. அதற்கு இன்னும் பல வருடங்கள் எடுக்கும். அதற்கிடையில் நெரிசல் மிக்க சிறைகளில் கைதிகள் படும் துன்பங்களுக்கு அளவேயிருக்கப்போவதில்லை.

அரசு கூறுகின்ற இந்தத் திட்டம்கூட நகரங்களில் சிறைகள் அமைந்துள்ள முக்கிய இடங்கள் வர்த்தகப் பெறுமதி மிக்கவை என்பதால் அவற்றை வணிக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கத்தோடு எடுக்கப்பட்டதே தவிர, கைதிகளின் நலன் கருதி எடுக்கப்பட்டதாகக் கொள்ள முடியாது. எனவே கைதிகளின் நலனில் அக்கறை செலுத்தி சிறைகளில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்.

போதைப் பொருள்களுடன் தொடர்புயைட குற்றங்களில் தண்டனை பெறுபவர்களில் அனேகமானோர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். போதைப் பொருளை விற்பவர்களையும் அவற்றைக் கடத்துபவர்களையும் விட்டுவிட்டு, அதனைப் பயன்படுத்துவோரையும் பணத்துக்காக அவற்றை இடத்துக்கிடம் கொண்டுசெல்லுபவர்களையுமே காவல்துறையினர் பெரும்பாலும் கைது செய்து சிறைகளில் அடைக்கின்றனர். எனவே இவர்கள் தொடர்பில் புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம். இவர்களைச் சிறைகளில் அடைத்து வைத்திருப்பதைவிட, வேறு வழிகளில் நல்வழிப்படுத்தி சமூகத்துடன் மீளிணைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவேண்டும். அதன் மூலம் சிறைகளில் கணிசமான நெருக்கடியைக் குறைக்கமுடியும்.

போதை மறுவாழ்வு மையங்களை ஏற்படுத்தி போதைக்கு அடிமையானவர்களை அங்கு கட்டாய சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தோடு நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையையும் கணிசமாகக் குறைக்கமுடியும். இவை தொடர்பில் உடனடியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதன் மூலம் கைதிகளையும் மனிதர்களாக நடத்துவதற்கான முயற்சிகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

சிறைகளில் இடப்பற்றாக்குறை என்பது இலங்கையில் நீண்ட காலமாகவே நிலவி வரும் பிரச்சினை என்றபோதும், மாறி மாறி வரும் ஆட்சியாளர்கள் அதற்கொரு நிரந்தரத் தீர்வை இன்னும் எடுக்கவில்லை என்பது அவர்களின் அலட்சியத்தையே காட்டி நிற்கின்றது. எனவே இனியும் காலந்தாழ்த்தாது உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு ஆட்சியாளர்கள் தீர்வு காணவேண்டும்.

# அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் மலையக தலைவர்கள் சந்திப்பு

### மனோ அணி தெரிவிப்பு

முன்கூட்டியே நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது நிகழ்வில் கலந்துகொள்ளச் செல்கின்ற கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இருக்கப்போவதில்லை என்பதால் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுவதாகச் சொல்லப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொள்ள முடியாமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் நேரடியாகத் தெரிவித்து விட்டேன். அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அடுத்த வாரம் உசிதமான ஒரு தினத்தில் சந்திப்போம் என்று என்னிடம் நேரடியாகப் பதிலளித்து விட்டார்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் கூறியதாவது:-

வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து ஈழத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்குச் சாத்தியமான தீர்வுகளை நேர்மையாகத் தேடும் அதேவேளை, மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் பிரத்தியேகமாக அனைத்து மலையக எம்.பிக்களையும் சந்திக்கும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியே பலமுறை கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு அறிமுகமில்லாத ஒரு புதிய தலைவர் அல்ல. அத்துடன் இன்றைய ஒரே நாள் சந்திப்பில் மலையகத்தின் 200 வருடப் பிரச்சினைகளும் தீர்வுக்கு வந்து விடும் என்றும் எவரும் விளையாட்டாககூட எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, தவிர்க்க முடியாத காரணத்தால் வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த எமது சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டுவிட்டார். அத்துடன் அந்தப் பிரச்சினை முடிந்தது.

வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நாம் கொண்டு வந்த மலையகம் - 200 முழுநாள் விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்த்தரப்பு, ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மலையக மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என மிக உறுதியாகக் கருத்து தெரிவித்துள்ளனர். இது ஒரு மிக சாதகமான சூழலையும், புதிய பல எதிர்பார்ப்புகளையும் உருவாகியுள்ளது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பரந்துப்பட்ட நிகழ்ச்சி நிரல் கொண்ட பின்வரும் கலந்துரையாடலை நடத்தவே நாம் விரும்புகிறோம்:

01. மலையகத்தில் வீடு கட்டி வாழவும், வாழ்வாதார தொழிலுக்குமான காணி உரிமை.

02. பெருந்தோட்ட குடியிருப்புகளை அரச பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வருவது.

03. இந்திய அரசு உறுதியளித்துள்ள இலங்கை ரூ. 300 கோடி நன்கொடை பயன்பாட்டுத் திட்டம்.

04. சமூக சபை என்ற மலையக மக்களுக்கான அதிகாரப் பகிர்வு.

05. பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும், அரசுக்கும் இடையிலான நீண்டகால குத்தகை ஒப்பந்தம் மீளாய்வு.

ஆகியவை பற்றிப் பேசவே தமிழ் முற்போக்குக் கூட்டணி விரும்புகின்றது. இது பற்றி நாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கவுள்ளோம்.

அந்த அதிகாரபூர்வ கலந்துரையாடலில், அனைத்து மலையக எம்.பிக்கள், கட்சிகள் கலந்துகொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். மற்றபடி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள், எம்.பிக்கள் ஜனாதிபதியைப் பிரத்தியேகமாக சந்திப்பது சர்வகட்சி மாநாடு அல்ல. அது அது எமக்குத் தொடர்பற்ற அரச உள்விவகாரம் - என்றார்.

# எய்ட்ஸ் நோயாளர்களுக்கு புதிய சிகிச்சை அறிமுகம்

எச்.ஐ.வி. ஆபத்தில் உள்ளவர்களுக்கு அபாயத்தைத் தடுக்க 'ப்ரெப்' என்ற புதிய சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய எஸ்.ரி.டி. எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவிக்கின்றது.

தேசிய எஸ்.ரி.டி. எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன புதிய சிகிச்சை முறை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தரவுகளைச் சேகரித்து சோதனை செய்கிறோம். பொதுவாக, மற்ற ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் எச்.ஐ.வி. தொற்று உள்ளது.

ஆனால் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 இல், புதிதாக 48 வீத அதிகரிப்பு ஏற்பட்டது என்பதை நாம் குறிப்பாகச் சொல்ல வேண்டும்.

எச்.ஐ.வி தொற்றாளர்கள் அதிகரிப்பே இதற்குக் காரணம். 2021 இல் கொவிட் பிரச்சினையால் பலர் எச்.ஐ.வி. தொற்று பரிசோதனைகளை முன்னெடுக்கவில்லை. கடந்த ஆண்டை விட எச்.ஐ.வி. தொற்று அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பதை இந்த ஆண்டின் இறுதியில் கணிக்கலாம்.

2023 இன் முதல் காலாண்டில், 165 புதிய நோய்த்தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த நோய்த்தொற்றுகளில் பெரும்பாலும் ஆண்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தேசிய எஸ்.ரி.டி. எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம், எச்.ஐ.வி. அபாயத்தில் உள்ளவர்களுக்காக ப்ரெப் எனும் புதிய சிகிச்சை முறையை ஆரம்பித்துள்ளது.

ப்ரெப் சிகிச்சையை நாடளாவிய ரீதியில் உள்ள 41 எஸ்.ரி.டி. சிகிச்சை நிலையங்களில் பெறலாம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பயன்பாட்டிலிருந்து 5 வகையான மருந்துகளை நீக்க நடவடிக்கை

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும். மருந்துகளில் 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் விமாவதால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் தடுப்பூசி உள்ளிட்ட 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக ப்ரோபோபோல் தடுப்பூசி, புபிவாகைன், அமெக்சிலீவ், பெட்ரி சோலோன் மற்றும் செஃப் ரிசோன் ஆகிய மருந்துகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

மருந்துகளைக் கொள்வனவு செய்யும் அல்லது மருந்துகளை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் தேசிய ஒழுங்குமுறை ஆணையம் தலையிடாது எனவும், மருந்து தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டால் குறித்த விடயத்தில் தாங்கள் தலையிடுவதாகவும் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதே நேரம், மருந்துகளை இறக்குமதி செய்யும் அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனங்களால் மாத்திரமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறித்த அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


அரசாங்கம் மருந்துகளை இறக்குமதி செய்யும் போது, உரிய வகையில் கேள்வி கோரல் இடம்பெற்று அரச கொள்முதல் விதிகளின் படி மருந்துகள் கொள்வனவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நாட்டுக்கு தேசிய ஔடத அதிகார சபை மருந்துகளைக் கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்பட்ட கருத்துகளை நிராகரிப்பதாகவும், அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை எனவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

(05)

# சாணக்கியன் ஊழல் பற்றி நாம் வாய் திறந்தால் அவர் நடுத்தெரிவில் நிற்கவேண்டிய நிலைவரும்

### ஈ.பி.டி.பி. பதிலடி



நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் ஊழல் குறித்து நாங்கள் வாய்திறந்தால் அவர் தெருவில் நிற்கவேண்டிய நிலைவரும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈபிடிபி) மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் த.சிவானந்தராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், சாணக்கியன் தனது வேட்டியை ஒவ்வொரு இடமாக வீசி தற்போது சூறை முள்பத்தையில் வீசியுள்ளார் எனவும் அதன் தாக்கம் இனி அவருக்கு தெரியவரும் எனவும் இதன்போது தெரிவித்தார்.


போராட்டத்தைப்பற்றியும் அதன் வலி பற்றியும் தெரியாத அவருக்கு தமது கட்சியை விமர்சிப்பதற்கு எந்த அருகதையும் இல்லையெனவும் அமைப்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வைத்தியசாலைகளில் நெருக்கடியால் நிறுத்தப்படவுள்ள முக்கிய சேவைகள்

அடுத்த சில மாதங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் சி.ரி. ஸ்கான், எம்.ஆர்.ஏ மற்றும் பி.ஈ.ரி. ஸ்கான் பரிசோதனை சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போதுள்ள கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த சேவைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரை புதிய அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என சானக தர்மவிக்ரம சுட்டிக்காட்டியுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## மலையக மக்களின் குடி உரிமையைப் பறித்த

# இந்திய – பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தை ஆதரித்த ஜி.ஜீயின் முடிவு குறித்துப் பேரன் குதர்க்க விளக்கம்

### 85 சதவீதத்தினரை இலங்கையராக்கியது பிழை என்றால் மன்னிப்புக் கேட்கத் தயாராம்

மலையக மக்களில் 85சதவீத மக்கள் பிரஜா உரிமையை பெறக்கூடிய சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தற்காகநிபந்தனையற்ற விதத்தில் இதயபூர்வமாக மலையக மக்களிடம் மன்னிப்பு கேட்க தயாராகஇருக்கிறேன்என்றுதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும்யாழ்.மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அத்துடன் அப்பாவி மலையக மக்களினை இந்தியாவிற்கு நாடு கடத்திய சிறிமா -சாஸ்திரி உடன்படிக்கையை ஆதரித்து மிகப்பெரும்துரோகத்தை இழைத்தவர்களும் மலையக மக்களிடம் மன்னிப்புகோரவேண்டும்என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200ஆவது ஆண்டு நினைவைக் குறிக்கும்நடைபவனி ஒன்று தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை நடைபெறுகிறது. அதற்கானஆதரவுப்பேரணிஒன்று யாழ்ப்பாணத்தில்நடந்தபோதுஅதில் நானும் எமது அமைப்பினரும் பங்குபற்றியிருந்தோம்.

அதில் கலந்துகொண்டிருந்த ஒரு பொதுமகன் என்னிடம் ''மலையக மக்களின் பிரஜா உரிமையைபறித்தசட்டத்திற்குஉங்கள் பாட்டனார்தலைமையில் உங்கள் கட்சி ஆதரவு வழங்கியமைக்காக இப்போதாவது மனிப்புகேட்பீர்களா" எனக் கேட்டிருந்தார். எனக்கு மிக மனவேதனையை தந்த அந்த கேள்விக்கான தெளிவுபடுத்தலை நான்இங்குசெய்யவிரும்புகிறேன்.

இங்கு இந்த ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்திருக்கும் மலையக மலையக மக் களின் பிரதிநிதிகளாக இங்கு அமர்ந்திருக்கும்மனோகணேசன் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோர் அம்மக்களின் பிரச்சினைகளையும்தேவைப்பாடுகளையும் மிகத் தெளிவாக முன்வைப்பார்கள்எனநம்புகிறேன் . மலையக மக்களின் பிரதிநிதிகள் தமது மக்களின் தேவைகளை வழமையாகவே மிகத் தெளிவாக முன்வைப்பவர்கள். அதில் என்னுடைய தலையீட்டிற்கு தேவையிராது என நம்புகிறேன்.

ஆதலால், இந்தச்சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் குறித்தான எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். மலையக மக்களின் குடியுரிமையை பறித்த இலங்கை பிரஜாஉரிமைசட்டத்தை (18/1948) எமதுகட்சிஎதிர்த்தேவாக்களித்தது.

அந்தச் சட்டத்தில் இரண்டு தலைமுறைகள் இலங்கையில் வாழ்ந்ததை சட்ட ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தினாலேயே இலங்கைக் குடிஉரிமை மலையக மக்களுக்கு வழங்கப்படும் எனச் சொல்லப்பட்டிருந்தது. அது அக்காலப்பகுதியில் மலையக மக்களால் ஒருபோதும் செய்யப்படக்கூடியது அல்ல.

அன்றைய சூழ்நிலையில் மட் டுமல்ல இன்றும்கூட அப்படியான ஆவண சமர்ப்பித்தல் எந்த வொரு நாட்டிலும் இல்லை. மலையக மக்களை இந்த நாட்டில் உரிமையற்றவர்களாக மாற்றிய சட்டத்தை எனது பாட்டனார் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்முற்றுமுழுதாகஎதிர்த்தே வாக்களித்திருந்தது என்பதை மிக தெளிவாக இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதன்பின்னர் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஒரு பல்லின பிரதிநிதித்துவ அரசை அமைக்க அழைப்பு விடுத்த பிரதமர்டி.எஸ்.சேனநாயக்காவுடன் நடந்த பேச்சுகளில் மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த இலங்கை குடியுரிமை சட்டத்தை மீளப்பெறுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிபந்தனை விதித்திருந்தது.

இந்தக் கோரிக்கைகளுக்கு இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவும் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் டி.எஸ்.சேனநாயக்க அரசு, ஏலவே நிறைவேற்றிய இலங்கைக் குடிஉரிமைச் சட்டத்தை மீள பெறுவதற்கு மறுத்திருந்தது.

அதற்குப் பதிலாக இந்திய - பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தைகொண்டுவரலாம்எனும் நிலைப்பாட்டை எடுத்தது (சட்ட இலக்கம் 3/1948). அதன்பிரகாரம் 10 வருடங்கள் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கைக் குடிஉரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனும் நிலைப்பாட்டை டி.எஸ்.சேனநாயக்க ஆட்சி எடுத்திருந்தது.

ஆனால், நவீன உலகில் இருக்கும் நடைமுறையான ஐந்து வருடங்கள் இந்த நாட்டில் இருந்தமைக்கான ஆதார்த்தை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை குடியுரிமையை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யுமாறு அகில இலங்கைதமிழ்காங்கிரஸ்உட்பட ஏனைய தமிழ் கட்சிகள் தமது தீர்வை முன்வைத்திருந்தன.

ஐந்து வருடக் கோரிக்கைக்கு இணங்க மறுத்த டி.எஸ். சேனநாயக்க, தமிழ்க் கட்சிகள் மற்றும் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருஆகியோரின்தொடர்ச்சியான அழுத்தம்காரணமாக, ஒருகுடும்பம் 7வருடம்இலங்கையில்இருப்பதை உறுதிப்படுத்தினால் இலங்கைக் குடிஉரிமையைப்பெறலாம்எனும் நிலைப்பாட்டிற்கு இணங்கிவந்தார். தனிநபருக்கு அந்த கால எல்லை 10 வருடம் எனவும் கூறப்பட்டு இந்திய-பாகிஸ்தான்குடியுரிமைசட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த இந்திய- பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடங்களுக்குள்பதிவுகளைமேற்கொண்டால் மாத்திரமே அவர்கள் குடிஉரிமை பெற முடியும் என அரசு அறிவித்திருந்தது.

இதன் மூலம் ஏறத்தாழ 85 சதவீத மலையக மக்கள் இலங்கை குடியுரிமையை பெறக்கூடிய வாய்ப்பை இந்தச் சட்டம்பெற்றுகொடுத்தது. 85சதவீத மலையக மக்கள் குடியுரிமையை பெறக்கூடிய அந்த சட்டத்திற்கே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆதரவளித்திருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டு செல்வநாயகம் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியை உருவாக்கினார். அவர் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி, மற்றும் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன மலையக மக்களில் ஏறத்தாழ 85 சதவீதமானவர்களுக்குஇலங்கைக் குடிஉரிமையை பெற்றுக்கொள்ள கூடிய அந்த சட்ட மூலத்தை எதிர்த்திருந்தார்கள்.

ஐந்து வருடம் இலங்கையில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பித்தல் மூலம் குடிஉரிமை வழங்கும் கோரிக்கைக்கு டி.எஸ்.சேனநாயக்க அரசு இணங்காதபடியால் 1949ஆம் ஆண்டில் ஏறத்தாழ 85 சதவீத மலையக மக்கள் குடி உரிமை பெறக்கூடியதாக இருந்த இந்திய- பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலத்தின் கீழ் குடிஉரிமைக்குவிண்ணப்பிக்கவேண்டாம் எனும் பரப்புரை இயக்கத்தையும் ஆரம்பித்து மலையக மக்கள் குடிஉரிமையை பெறுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதை எதிர்த்து இருந்தார்கள்.

டி.எஸ். சேனநாயக்கஅரசுஇந்த சட்டத்தை மாற்றப்போவதில்லை என ஈற்றில் புரிந்து கொண்ட இவர்கள், கடைசி ஆறு மாத காலப் பகுதிக்குள் தமது கோரிக்கையில் இருந்து பின்வாங்கி மலையக மக்களை குடிஉரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்த ஆறுமாத காலத்துக்குள்ளேயேதொண்டமான் உட்பட்டச் சிலர் குடிஉரிமையை பெற்றுக்கொண்டார்கள். ஆனால், இந்த சட்டமூலத்தின் கீழ் விண்ணப்பிக்கவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்ற சாமானிய மலையக மக்கள், விண்ணப்பத்திற்கான எதுவித ஆவணங்களின் ஆயத்தமும் இல்லாத நிலையில் திடீரென இறுதி ஆறு மாதங்களுக்குள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத துரதிஷ்ட நிலைக்கு உள்ளானார்கள்.

ஏறத்தாழ 85 சதவீதமானோர் குடிஉரிமை பெறக்கூடிய சட்டமூலத்தை எமது கட்சி ஆதரித்ததே தவிர எதிர்க்கவில்லை.

உண்மையில் அதை எதிர்த்தது தமிழ் அரசுக் கட்சிதான். அந்த நிலைப்பாட்டில்கூட இறுதிக் கட்டத்தில் மாற்றத்தை செய்ததால் வெறும் 15 சதவீதமான மலையக மக்களே குடிஉரிமை பெறகூடியதாக இருந்தது. 85 சதவீத மலையக மக்கள் குடிஉரிமை பெறும் சந்தர்ப்பத்தை வீணாக இழந்திருந்தோம்.

தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கையின் பிரகாரம் இந்தச் சட்டமூலத்தினைப்பகிஷ்கரித்தமையால் ஏறத்தாழ 85 சதவீத மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆனார்கள். இந்த 85 சதவீத மலையகமக்கள்குறித்துதீர்மானம் எடுக்கப்படும்எனஎதிர்ப்பார்க்கப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்த 85 சதவீத மலையக மக்களில் ஏறத்தாழ அரைவாசிபேர் நாடற்றவர்களாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்தஇடத்தில் மீண்டும் தெளிவாக ஒன்றை பதிவு செய்ய விரும்புகிறேன்.

மலையக மக்களின் குடிஉரிமையைப் பறித்த 18/1948 இலங்கைக்குடிஉரிமைச்சட்டத்தை எமது தமிழ் காங்கிரஸ் கட்சி முழுமையாக எதிர்த்தே இருந்தது. பறிக்கப்பட்ட குடிஉரிமையை மீள வழங்கும் 3-1949 இந்திய- பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தையே எமது அமைப்பு ஆதரித்திருந்தது.

இந்த விடயத்தில் 100 சதவீத வெற்றியைப்பெறுவதுதான்வெற்றி, மாறாக ஆககுறைந்தது 85சதவீதமாவது வெற்றியை பெறுவதற்கு சம்மதித்தமை வெற்றியல்ல என குற்றம் சுமத்தப்பட்டால், 85 சதவீத மக்கள் குடிஉரிமையை பெறக்கூடிய சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தற்காகநிபந்தனையற்ற விதத்தில்இதயபூர்வமாக மலையக மக்களிடம் மன்னிப்பு கேட்கத் தயாராக இருக்கிறேன்.

ஆகக் குறைந்தது 85 சதவீத மலையக மக்கள் குடி உரிமையைப் பெறக்கூடிய சட்டமூலத்தை ஆதரித்தது பிழையெனக் கூறுபவர்கள், அந்த 85 சதவீத மலையக மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு, அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட ஏதுவாக அமைந்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை எதுவித தயக்கமோ கூச்சமோ இன்றி ஆதரித்தார்கள்.

அந்த மக்களின் மூதாதையர் இந்தியாவில் இருந்து வந்ததைத் தவிர இந்தியா பற்றி எதுவுமே தெரிந்திராத, இலங்கையிலேயே பிறந்து இலங்கையராகவே வாழ்ந்த அந்த அப்பாவி மலையக மக்களினை இந்தியாவிற்கு நாடுகடத்திய சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை ஆதரித்து மலையக மக்களுக்கு மிகப்பெரிய துரோகத்தை இழைத்தவர்களும் மலையக மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். இறுதியாக இந்த இடத்தில் மலையக மக்கள் குறித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரான எமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன். மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக எந்தத் தரப்பினாலும் நேர்மையாக முன்வைக்கப்படும் எந்ததிட்டத்தையும் முழுமனதோடு எதுவித நிபந்தனையுமின்றி ஆதரிப்பதற்குதமிழ்தேசியமக்கள் முன்னணிஎப்போதும்தயாராகவே இருக்கும் -என்றார்.

# குழந்தையின் சிதைந்த தலை மீட்பு; மாநகர சபையினது கவனயீனமா?





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப் பகுதியில் நேற்று மாலை உருக்குலைந்த நிலையில் குழந்தையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது. தலைமட்டுமே உருப்படியாகக்காணப்பட்டஅந்தச்சடலத்தில் ஏனைய பகுதிகள் உருக்குலைந்திருந்தன.

அந்தப் பகுதியில் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியிருந்த அந்தச்சடலம், கோம்பையன் மணல் மயானத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளால் புதைப்பதற்காக அனுப்பப்பட்ட மருத்துவக் கழிவுகளுடன் காணப்பட்டதா எனச் சந்தேகிக்கப்படுகின்றது. அரைகுறையாகப் புதைக்கப்பட்ட அந்தச் சடலத்தை நாய்கள் இழுத்துச் சென்று அருகிலுள்ள காணியில் போட்டிருக்கக்கூடியசாத்தியங்கள்பற்றி விசாரணைகள்தொடங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் உயிரிழக்கும் சிசுக்களின்உடல்கள்வைத்தியசாலை நிர்வாகங்களினால் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குபணம்செலுத்தப்பட்டு கோம்பையன் மணல் மயானத்தில் புதைக்கப்படுகின்றன.

பெரும் குழியை ஒரே நேரத்தில் அகழ்ந்து, கிடைக்கும்மனிதஎச்சங்கள் மற்றும்கால்நடைகளின்கழிவுகளை அதற்குள் பகுதியாக இடப்பட்டு மண் போட்டு நிரவும் நடைமுறையினை மாநகர சபையினர் பின்பற்றி வந்துள்ளனர். இதனால் அண்மைக் காலத்தில் புதைக்கப்பட்ட ஓர் சடலம் அல்லது உடல்பாகம், நாய்களால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குழந்தையின் சிதைந்த சடலம் குறித்து நேற்று யாழ்ப்பாணம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதனையடுத்து நீதிபதியின் கவனத்திற்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது.

இதன் பிரகாரம் நீதிவான் ஆனந்தராஜா சட்ட வைத்திய அதிகாரி சகிதம் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டதோடு கோம்பையன்மணல் மயானத்தில் மனித எச்சங்கள் புதைக்கும் பகுதிக்கும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இவ்வாறு நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி மற்றும் பொலிசார் ஆகியோர் மயானத்திற்கு சென்ற சமயமும் மனித மற்றும் மிருகக் கழிவுகளைப் புதைப்பதற்காக அகழப்பட்ட குழிக்குள் நாய்கள் நின்று சடலங்களை இழுத்தெடுப்பதனை அவர்கள் அவதானித்துள்ளனர்.

மயானத்தில் புதைப்பதற்கான பணத்தை பெற்றபோதும் முறையாக புதைக்கத்தவறிய மாநகர நிர்வாகத்தினை ஓகஸ்ட் 16 நீதிமன்றில் முற்பட நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் கட்டளையிட்டுள்ளார்.

## மாண்புமிகு மலையகம் எழுச்சி நடைபவனி: தம்புள்ளையில் இருந்து நாலந்தா சென்றது

மாண்புமிகுமலையகம் எழுச்சி நடைபவனி, நேற்று (வெள்ளிக்கிழமை) தம்புள்ளையிலிருந்து நாலந்தாவரை முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களின் வரலாற்றை நினைவுகூரும் வகையில் தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை முன்னெடுக்கப்படும் நடைபவனி நேற்று தம்புள்ளையில் இருந்து நாலந்தா வரை முன்னெடுக்கப்பட்டது.


மலையக மக்களின் 200 வருடகால வரலாற்றை நினைவுகூரும்வகையிலும், மலையக மக்களின் மாண்பை பறைசாற்றும் விதமாகவும் வேர்களை மீட்டு உரிமை வென்றிட என்ற தொனிப்பொருளில், மலையக எழுச்சிப் பயணம் மன்னாரில் ஆரம்பமானது.

இந்த நடைபயணத்தில் இதுவரை பலரும் கலந்து கொண்டு ஆதரவைத் தெரிவித்து வருவதோடு, இதற்கு ஆதரவை வெளியிடும் வகையில் பல பிரதேசங்களில் கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

16 நாள்கள் தொடர்ச்சியாக இந்த நடைபயணம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இறுதி நாளான இன்று (சனிக்கிழமை) நாலாந்தாவில் இருந்து மாத்தளை வரை நடைபயணம் முன்னெடுக்கப்படவுள்ளது.

(05)

## வெப்பநிலை அதிகரிப்பு முதியவர் யாழில் சாவு



யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் வெப்பநிலை அதிகரிப்பால் முதியவர் ஒருவர் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் ஞானமூர்த்தி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டின் குளியலறையில் மயங்கியநிலையில் காணப்பட்ட நபரை, வீட்டார் மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட போட்டிப் பொருளாதாரமே தேவையானது

## ஜனாதிபதி தெரிவிப்பு

வலுவான நிதி மற்றும் மனித மூலதனம் இல்லாமல் ஒரு நாட்டை துரித பொருளாதாரவளர்ச்சிக்குஇட்டுச்செல்ல முடியாது. இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டிப் பொருளாதாரமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவலியுறுத்தினார். கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை வல்லுநர் சங்கங்களின் அமைப்பின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் இலங்கைத் தொழிற்சங்க அமைப்பின் வருடாந்த மாநாட்டின்போது நாடு இருண்ட நிலையில் இருந்தது . அப்போது உங்களில் பலருக்கு இலங்கையின் எதிர்காலம் குறித்த கேள்வி இருந்தது. ஆனால்உங்கள்அனைவரின்ஆதரவால், எங்களால் அதை மாற்ற முடிந்தது. அதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், எதிர்காலம் குறித்த நம்பிக்கை வைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.ஒழுங்கான பொருளாதார நிர்வாகத்தை நாம் மேற்கொண்டால், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் திட்டமிட முடியும்.

ஒரு நாடு என்ற வகையில், நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத சவாலை எதிர்கொள்ளும் வரை பொருளாதாரப்பிரச்சினைகளுக்குத்தீர்வுகளைத் தேடவில்லை. அதனால்தான் பொருளாதாரச் சிக்கல் வளர்ந்தது. அரசியல் தலைவர்கள் பொருளாதாரம் தொடர்பான சரியான முடிவுகளை எடுக்கத் தயங்கியதால் நிலைமை மேலும் மோசமானது. மேலும் இந்த பொருளாதார நெருக்கடியை மக்கள் கடுமையாக உணர்ந்தனர். அவர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சில போராட்டங்கள் வேறு கோணத்தில் இருப்பதை போராட்டத்தின் நிறைவில் காண முடிந்தது. இந்நிலையில் தலைமைத்துவ வெற்றிடம் தென் பட்டது. அன்றிருந்த அரசு சுவரில் நசுக்கப்பட்டிருந்தது.

அதனால்தான் அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ தனது பதவியை ராஜினாமா செய்ய நேரிட்டது. அதன்போது எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து ஆட்சியைக் கையளிக்க ஜனாதிபதி முயற்சித்தார். ஆனால் அந்த சவாலை ஏற்க எதிர்க்கட்சித் தலைவர் தயாராக இருக்கவில்லை. உலகிலேயே முதன்முறையாக ஜனாதிபதி ஒருவர் மற்றொருவருக்கு ஆட்சி அதிகாரம் வழங்க அழைப்பு விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு மறுப்பு தெரிவித்ததுகூட கின்னஸ் சாதனையா கவே கருதுகிறேன். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி என்னை நாட்டை பொறுப்பேற்க அழைத்தார். நான் பதவி கேட்கவில்லை. ஆனால் அப்போது நாடு நெருக்கடியில் இருந்தது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய பின்னர், நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை எடுத்தேன். அதன்படி, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மாதத்திற்குள் குறுகிய கால தீர்வுகளை வழங்க முடிந்தது. வரிசையில் நிற்கும் நிலைமைக்கு முடிவு கட்டப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் விரைவில் மீண்டு வருவதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். அந்த சமயம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு வழிகளில் உதவினர். ஜனாதிபதி என்ற முறையில் நாட்டின் பொருளாதாரத்தை என்னால் மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் செயற்பட்டார்கள். அப்போது என்னுடன் சவால்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள், எம்பிக்களும் இருந்தனர். தொழில் வல்லுநர்கள் எமது திட்டங்களை ஆதரித்தனர். கடன் மறுசீரமைப்புச் செயல்முறை இன்னும் முடிவடையவில்லை. இந்த செயற்பாட்டை சீர்குலைக்க பல்வேறு நபர்கள் முயற்சித்து வருகின்றனர். இந்த கடன் மேம்படுத்தல் திட்டம் நிறுத்தப்பட்டால், வங்கிகள் உட்பட அனைத்து துறைகளும் ஒரு வாரத்தில் வீழ்ச்சியடைந்து விடும். இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டிப் பொருளாதாரம் மட்டுமன்றி அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறைக்கு திறந்த பொருளாதாரம் அவசியம். பொருளாதாரம் வேகமாக முன்னேற, நிதி மற்றும் மனித மூலதனம் இருக்க வேண்டும். உதாரணமாக கூறுவதாயின் இந்தியாவின் மகாராஷ்ட்ரா பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு நிர்மாணத்துறையின் முன்னேற்றமே காரணமாக அமைந்துள்ளது. அக்காலத்தில் இலங்கையின் பொருளாதரம் திறக்கப்பட்டிருந்தால் அந்த முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்திருக்கும். 30 வருடத்தில் மூலதனத்தை ஈட்டிக்கொள்வதற்கான திட்டங்கள் 10 வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் பலனாக இந்தியா பெருமளவான மூலதனத்தை ஈட்டிக்கொண்டது. அதனால் புதிய தலைநகரத்தை ஆரம்பித்து சுற்றுலா துறையில் பெருமளவான முதலீட்டை இந்தியா மேற்கொண்டது. இலங்கை 1977 இல் பொருளாதா ரத்தை திறந்து மூலதனத்தை ஈட்டிக் கொள்ள முயற்சித்தது. அதனால் இலங்கைக்கு பல்வேறு வெளிநாட்டு முத லீடுகளும் கிடைத்தது. துரதிஷ்டவசமாக எமது நாட்டில் யுத்தமொன்று ஏற்பட்டது. இருப்பினும் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவு பெற்ற பின்னர் மெதுவாக பொருளாதாரம் மீண்டெழுந்தது. அதன் பின்னர் 2021 – 2022களில் கொரோனா பரவலின் பின்னர் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்தது. 2019 இல் நாட்டின் பொருளாதாரம் காணப்பட்ட நிலைக்கும் தற்போதுள்ள நிலைமைக்கும் மிகப் பெரிய இடைவெளி காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 2019இல் இருந்த நிலைமைக்கு நாடு வந்துகொண்டிருக்கிறது என்பதை கூற வேண்டும். வலுவான போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதேபோல் தனியார் துறையை முதன்மைப்படுத்திய பொருளாதாரம் இருந்தால் பொருளாதாரச் சரிவு ஏற்படாது. எமக்கு வெளிநாட்டு மூலதனம் தேவைப்படுகிறது. வெளிநாட்டு மூலதனங்களை ஈட்டும் அளவான வளர்ச்சியை நாம் அடைந்துகொள்ள வேண்டும். முதலீடு செய்யும் ஒவ்வொரு டொலருக்கும் பதிலாக மற்றுமொரு டொலரை சம்பாதித்துகொள்வதே இலக்காக இருக்க வேண்டும்.

அதனாலேயே முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதிச் ஊக்குவிப்புச் சபை ஆகியவற்றுடன் இணைந்து புதிய பொருளாதார ஆணைக்குழு ஒன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகைளில் முதலீடுகளை கவரக்கூடிய நாடாக நாம் இருக்கவேண்டும். பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுடன் போட்டியிட்டு முன்னேறிச் செல்ல வேண்டும். தெற்காசியாவின் அனைத்து நாடுகளுடனும் எமக்கு பெரும் போட்டி காணப்படுகிறது. அதற்கு நாம் தயாராக இல்லாவிட்டால் துரித அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. துரித அபிவிருத்தி அடையும் வலுவான போட்டித்தன்மை மிக்க பொருளாதாரம் ஒன்று எமக்கு அவசியப்படுகிறது.

இந்நாட்களில் பெருமளவானோர் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். சிறந்த எதிர்காலத்தை நோக்கமாக கொண்டே அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். குறுகிய காலத்திற்கு அது நன்மையளிப்பதாக தெரிந்தாலும், நாட்டை விட்டுச் செல்வோரில் அதிகளவானோர் சம்பாதித்துக்கொண்டு நாடு திரும்புகின்றனர். அதனால் மாத்திரம் பிரச்சினைகள் தீர்ந்துவிடுவதில்லை. மனித வள மூலதனம் போதியளவில் இல்லாமையே நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. அதற்காக நமது இளைஞர் யுவதிகளை பயிற்றுவிக்க வேண்டும். அதற்கான திட்டமிடல் ஒன்றும் அவசியம்.

பல்கலைக்கழங்களுக்குள் பெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. பொறியியல், அறிவியல் துறைகளுக்குள் பெருமளவானோர் துரிதமாக வெளியேறுகின்றனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது. அதேபோல் வைத்தியசாலைகளில் போதியளவு வைத்தியர்கள் இல்லை. அதற்கு தீர்வாக தனியார் துறை அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைந்து புதிய பல்கலைக்கழங்களை ஆரம்பிக்கவுள்ளோம். அதனூடாக இத்துறைக்குள் காணப்படும் பற்றாக்குறைகளை நிவர்த்திக்க எதிர்பார்த்துள்ளோம். நாட்டிற்குள் புதிய பல பல்கலைக்கழங்களை உருவாக்குவது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறோம். குருநாகலில் உள்ள பல்கலைக்கழக கல்லூரியை, அறிவியல் தொழில்நுட்ப கல்லூரியாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பொலன்னறுவை தனியார் பல்கலைகழகத்தை ஆரம்பிப்பதற்கும் தற்போது விண்ணப்பம் கிடைத்துள்ளது. உரிய நிறுவனங்களுடன் இணைந்து குறைந்தபட்சம் 04 – 05 பல்கலைக்கழகங்களையாவது ஆரம்பிக்க வேண்டும்.

அதற்குரிய புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்த்துள்ளோம். அதற் காக உங்களது அமைப்பின் ஒத்துழைப்பையும் வழங்க முடியும். இதனால் இலாப மீட்டும் நிறுவனங்களை உருவாக்க வேண்டும். நாட்டின் முன் னேற்றத்திற்கு போட்டித்தன்மைமிக்கபொருளாதாரமும் தனியார்துறை பொருளாதாரமும் அவசியப்படுகிறது. கண்டியில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கடந்த இந்திய சுற்றுப் பயணத்தின் போது சென்னையிலிருக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (IIT) அழைப்பு விடுத்தேன். இலங்கையின் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழங்களின் (SLIIT) எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது. அது மட்டும் போதுமானதல்ல. புதிய பல்கலைக்கழங்களுக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. மருத்துவ பல்கலைக்கழகத்திற்கான கேள்விகளும் எழுந்துள்ளன. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திலுள்ள அறிவியல் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் மற்றும் கோலம்பூரிலுள்ள பல்கலைக்கழகம் என்பன இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன. அரசாங்கம் குறைந்தபட்சம் 5 – 6 வரையிலான பல்கலைக்கழங்களை நிறுவ எதிர் பார்த்துள்ளது. அதற்காக தனி யார் பல்கலைக்கழங்களை வலுவூட்டும் வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூட்டு ஒத்துழைப்பின் ஊடாக, பொருளாதாரத்தை துரிதமாக பலப்படுத்த முடியும். மனித வள மூலதனம் அவசியப்படும். இவ்விடயத்தில், இலங்கை வல்லுநர் சங்கங்களின் அமைப்புக்கு பெரும் பொறுப்பு உள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினேன். மாகாண சபை மட்டத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான சட்டங்களை கொண்டு வர முடியும். நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள சட்டத்திற்கு இணங்கும் வரையில் ஆளுநர் அந்த பல்கலைக்கழகத்தை ஏற்றுக்கொண்டு நிறுவுவதற்கான சட்டங்களை நாம் கொண்டுவருவோம். நிதி மூலதனம் மற்றும் மனித வள மூலதனம் இல்லாமல், ஒரு நாடு துரித பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. மேலும், போட்டித்தன்மைமிகுந்தபொருளாதாரம் தொடர்பான கனவுகளையும் காண முடியாது. எனவே இலங்கை வல்லுநர் சங்கங்களின் அமைப்பின் (OPASL) நாம் முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான மனித வளங்களை உறுதிப் படுத்தும் செயற்பாடுகளில் பெரும் பங்கு வகிக்கும் என நம்புகிறேன் – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## தீ விபத்தில் இளம் ஜோடி பரிதாபச் சாவு

வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் இளம் தம்பதியினர் சாவடைந்துள்ளனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் கம்பஹா - அத்தனகல்ல பிரதேசத்தில் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 29, 27 வயதுடைய தம்பதியினரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

அத்தனகல்ல பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் இருவரும் அந்தப் பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த வேளையிலேயே தீ விபத்தில் சிக்கியுள்ளனர்.

மனைவி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். கடும் தீக்காயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கணவன் அங்கு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், தீவிபத்துஏற்பட்டமைக்கான காரணங்கள் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

# யாழ். மாவட்டத்தில் 69 ஆயிரம் பேர் குடிதண்ணீர் இல்லாமல் அவஸ்தை

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 ஆயிரத்து 113 பேருக்கு குடிதண்ணீர் இல்லாமல் அல்லல்படுகின்றனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி மற்றும் மருதங்கேணி பிரதேசசெயலகபிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 21 ஆயி ரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் குடிதண்ணீர் இல்லாமல் அல்லல்படுகின்றனர்.

குறித்தபிரதேசசெயலர்களின் கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். - என்றார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் ஓரிரு நாட்களில் மழை பெய்யாவிடின் நிலைமை மேலும் மோசமாகும் என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிகமான யானைகளுடன் இம்முறை எசல பெரஹரா

இந்த முறை கண்டி தலதாமாளிகை பெரஹெரா நிகழ்வுகளை அதிகளவான யானைகளின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 காரணமாக குறைந்தளவான யானைகளின் பங்குபற்றுதலுடன் கடந்த காலங்களில் கண்டி தலதாமாளிகை பெரஹெரா முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 4 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தமுறை அதிக யானைகளின் பங்குபற்றுதலுடன் பெரஹெரா நிகழ்வை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுகள் 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05).

## அதிக மருந்துப் பாவனையால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் சாவு

### இரத்த வாந்தி எடுத்து இறந்தார்

அதிகளவான மருந்துப் பாவனையால் இரத்த வாந்தி எடுத்தவர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்துள்ளார்

யாழ். வடமராட்சி, இமையான் பகுதியைச் சேர்ந்த இராசா சிவபாதம் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இரத்த வாந்தி எடுத்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

அதிகளவான மருந்துப் பாவனையால் உயிரிழப்பு ஏற்பட்டது எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர், கடந்த 8 மாத காலமாக உளநோய்க்கு உள்ளானநிலையில் அதற்குச் சிகிச்சை பெற்று அதற்கான மருந்துகளைப் பாவித்து வந்தவர் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## நண்பர்கள் முரண்பாடு கொலையில் முடிந்தது

இளம் குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் நண்பர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் ஒருவரை மற்றைய நபர் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார்.

31 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

கொலையாளியான 28 வயதுடைய இளைஞர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்குகின்றது ஜப்பான்

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியில் கிளிநொச்சியில் உள்ள விவசாயிகளுக்குஇலவசுக இரசாயன உரங்கள்வழங்கப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வுகிளிநொச்சி கமநலசேவை நிலையத்திலும் கண்டாவளை கமநலசேவை நிலையத்திலும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஐ.நா. அறிக்கையாளரும் ஆதரவு

மலையகஎழுச்சிநடை பயணத்துக்கு சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில், ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகடவும் தனது முழு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்படும் நடைபயணத்தை முழுமனதாக ஆதரிப்பதாகவும், மலையகத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான அரசின் முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் நவீன அடிமைத்தனத்தின்சமகாலவடிவங்கள், அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகட வலியுறுத்தியுள்ளார்.

# கிழக்கின் முன்னாள் எம்.பிக்கள் ஆளுநர் செந்திலுடன் சந்திப்பு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், க.கோடீஸ்வரன், கி. வெள்ளிமலை, ஞா.ஸ்ரீநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் இந்தச் சந்திப்பு குறித்துஞா.ஸ்ரீநேசன் செய்தியாளர்களிடம்தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கிழக்கு மாகாண மக்கள் சமகாலத்தில் எதிர் நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடியிருந்தோம், அவற்றில் சிலவற்றுக்கு அவ்விடத்திலேயே செயலாளர்கள்ஊடாகநடவடிக்கை எடுப்பதற்கும் பணித்திருந்தார்.

மேற்படி சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிப்புக்கள் செய்வது, மயிலத்தானமடு மாதவனை பிரதேசத்தில் தொடர்ந்தும் அத்துமீறி அபகரிக்கப்பட்டுவரும் மேய்ச்சல் தரை காணிகள் தொடர்பாகவும், கிழக்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைகள், சட்ட விரோதமான மண் அகழ்வு, காணி அபகரிப்புகள், காட்டு யானைகளின் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டதுடன் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகளைஉருவாக்குதல் தொடர்பிலும் எம்மால் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மட்டக்களப்பு புதுநகரில் விமானப் படையினரால் வசப் படுத்தப்பட்டுள்ளவலையிறவு பிரதான வீதியை மீளவும் பொதுமக்களின்பாவனைக்கு விட வேண்டும். தாண்டியடி பிரதேசத்தில் பொலிஸாரால் அபகரிக்கப்பட்டுள்ள மயான காணியை விடுவிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம்மால் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் வலயங்களுக்கு மாத்திரம் பாரபட்சமான முறையில் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கான ஆட்சேர்ப்புவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை தொடர்பிலும் அதனால் கிழக்கில் உள்ள தமிழ் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அதிருப்தியடைந்துள்ளமை பற்றியும்எம்மால்ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன், அந்த விடயம் தொடர்பில் பாரபட்சமின்றி உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாருக்கு ஆளுநர் அவ்விடத்திலேயே அறிவுத்தல்களை வழங்கி இருந்தார் எனவும் அவர் தெரிவித்தார். (05)

## முல்லைத்தீவு முள்ளியவளை பொதுசந்தையில் விசமிகள் அட்டகாசம்; வியாபாரிகள் பாதிப்பு



முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபையின் ஆழுகையின் கீழுள்ள முள்ளி யவளை பொது சந்தையில் வியாழக்கிழமை இரவு அடையாளம் தெரியாத விசமிகள் சிலர் புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில்வியாபாரிகளின் மரக்கறிகள்உள்ளிட்டசந்தை கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

வியாழக்கிழமை இரவு காவலாளி சந்தையின் முன் கதவை பூட்டிய நிலையில் வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று சந்தையின் கதவை உடைத்து உள்ளே புகுந்து சந்தைக் குள் இருந்து மது அருந்தப்போவதாக காவலாளியுடன் முரண்பட்ட நிலையில்கையில்மதுபானபோத்தல்களுடன் வந்த நபர்கள் சந்தை கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இதனால் வெள்ளிக்கிழமை காலை சந்தையைப் பூட்டி பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளார்கள். காலை 10 மணிவரை பொலிஸார் வந்து விசாரணை செய்யும் வரை சந்தை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

சம்பவ இடத்துக்கு முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ்குழுவினர் வருகைதந்துள்ளதுடன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளார் க.சண்முகநாதன் உள்ளிட்ட சபையின் உத்தியோகத்தர்கள் வந்து பார்வையிட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில்முறைப்பாட்டைப்பதிவுசெய்துள்ளார்கள். (05)

## நாடாளுமன்றில் தனது வையாள்களை வைத்து ஜனாதிபதி ரணிலே மோதலை ஏற்படுத்துகிறார்

### சாணக்கியன் குற்றச்சாட்டு

ஜனாதிபதி தான் விரும்புகின்ற நேரத்தில் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தனது கையாள்களை வைத்து சிறப்புரிமைகளை எழுப்பிக்குழப்பங்களை ஏற்படுத்துவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் நாடாளுமன்றசிறப்புரிமையைஆட்சியாளர்கள்தங்களுக்குத் தேவையான முறையில் பயன்படுத்துகின்றார்கள்.

இதனால்தான் நாடாளுமன்றத்தைக் கூட அரசாங்கம் தமது தேவைக்காகப் பயன்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எமக்கு தற்போது எழுகின்றது.

நாடாளுமன்ற சிறப்புரிமையைக்கூட இன்று ஆட்சியாளர்கள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

அண்மைக்காலச் செயற்பாடுகளை அவதானித்தால்நாட்டின் நீதிமன்றங்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் தேர்தலுக்கான நிதியை விடுவிக்காமல் தனது நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தித் தடுப்பது போன்ற விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறும் செயலாகும்.

எனவே, இந்தவிடயத்தில் ஜனாதிபதி தான் விரும்புகின்ற நேரத்தில் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தனது கையாள்களை வைத்து சிறப்புரிமைகளை எழுப்பி இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துகின்றார். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். - என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)



## வாணி மாணவர்களுக்கு கற்றல் உபகரண உதவி

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அப்பாடசாலையின் அதிபர் ச.சண்முகரத்தினம் தலைமையில் வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பகுதித்தலைவர் திருமதி தனபாலசிங்கம், ஆசிரியர்களான திருமதி ப. சிவக்குமார், திருமதி. எஸ். தவநேசன் ஆகியோரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான பெ.விவேகானந்தன், கோ. சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஜப்பானால் 2 அம்புலன்ஸ்கள் மூளாய் வைத்தியசாலைக்கு

ஜப்பான் அரசின் நிதியனுசரணையுடன் ஜப்பானிய தூதுவராலயத்தால் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளர் அம்புலன்ஸ்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வியாழக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொசி மற்றும் அவரது தூதரக அதிகாரிகள் இணைந்து இதனை வழங்கி வைத்த நிலையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினரால் யாழ் இசைக்கருவி நினைவு சின்னமாக வழங்கப்பட்டு தூதுவர் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்சியாக மூளாய் வைத்தியச்லையின் அனைத்து வசதி வாய்ப்புக்கள் குறித்தும் தூதுவர் ஆராய்ந்த நிலையில் தனது வருகையின் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் வைத்தியசாலை வளாகத்தில் நாட்டி வைத்தார்.

இதன்பொழுது ஜப்பான் தூதுவர் மிசுகொசி , தூதுவராலய அதிகாரிகள், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையினர், பணியாளர்கள், சங்கானை பிரதேச செயலர் , வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் , வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உதவி கூட்டுறவு ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் திட்டமிடுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கடன்மறுசீரமைப்புநடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவில்(RCEP)அங்கத்துவம் பெற்று, ஏனைய ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பான'ஆசியான்'அமைப்பின் தொலைநோக்கு பார்வைக்கு தான் உடன்படுவதாகவும், அந்த தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரகத்தில் இடம்பெற்ற 56ஆவது ஆசியான் தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆசியானின்56ஆவதுஆண்டு விழாவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத்தெரிவிக்கிறேன். இந்த அமைப்பு மெதுவாக ஆனால் சீராக வளர்ந்து, பரந்த எதிர்காலத்துடன் உலகின் மிகப்பெரிய பொருளாதார கூட்டிணைவுகளில் ஒன்றாக முன்னேறி வருகிறது. ஆசியாவில் உங்கள் செயற்பாடுகள் எளிதானது அல்ல என்றாலும், உங்களால் அதை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிந்துள்ளது.

இது வாழ்த்துவதற்குரிய சந்தர்ப்பமாக அமைந்திருக்கும் அதேநேரம் வருந்துவதற்கான சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளது. ஆசியான் அமைப்பின் தொடக்க காலத்திலேயே அதில் இணைந்துகொள்ளுமாறு இலங்கைக்கு அழைப்பு கிடைத்தது. நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு நானும் சாட்சியாளன் ஆவேன் என்பதோடு, எனது தந்தையார் அந்த பணிகளில் பங்கெடுத்தவர் ஆவார்.

1965 ஆம் ஆண்டளவில் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்த பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை தொடர்பிலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. முதற்கட்டமாக அப்போதைய பிரதமரான டட்லி சேனநாயக்கவினால் பசுமை புரட்சி என்ற பெயரில் அமைப்பொன்று நிறுவப்பட்டிருந்தது.

அதனூடாக செனோய் அறிக்கை வெளியிடப்பட்டது. அப்போதைய பல்கலைக்கழக கல்லூரியின் பொருளாதாரம் தொடர்பிலான விரிவுரையாளராக பணியாற்றியபேராசிரியர்செனோய் இலங்கைக்கு வருகைத் தந்து மேற்படி அறிக்கையை சமர்பித்திருந்தார்.

எனது தந்தையார் பல்கலைக்கழக கல்லூரியில் கற்ற காலத்தில் பேராசிரியர் செனோய் அங்கு விரிவுரையாளராக பணியாற்றினார். அப்போதைய அமைச்சரான ஜே.ஆர். ஜயவர்தனவின் அழைப்பின் பேரிலேயே பேராசிரியர் செனோய் இலங்கைக்கு வருகைத் தந்தார். பேராசிரியர் செனோயின் அறிக்கையினால், இலங்கையின் பொருளாதாரத்தில் தாராள தன்மை மற்றும் சமூக நலன் மீது அரசு கொண்டுள்ள பொறுப்புக்களை உறுதிப்படுத்த முடிந்தது.

இரண்டாவதாகவே இலங்கைக்கு ஆசியான் அமைப்பில் இணைந்துகொள்ளவேண்டும்என்ற அழைப்புகிடைத்தது. 2ஆம்உலகப் போர் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டிணைவொன்றை ஏற்படுத்தியிருந்த காரணத்தினால் அவ்வாறானதொரு அழைப்பு விடுக்கப்படுவது பொதுவான விடயமாகும்.

அக்காலத்தில்தென்கிழக்காசிய கட்டமைப்பொன்றுஇருக்கவில்லை. இருப்பினும் அது தொடர்பிலான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால்எமக்கு மேலதிக நேரமும் இருந்தது. அமைச்சராகவிருந்த ஜே.ஆர். ஜயவர்தனவின், அமைச்சரவை உறுப்பினர்கள் சிலர், அமைச்சரவைக்கு வெளியில் நாடாளுமன்றத்திலிருந்த எனது தந்தையார் உள்ளிட்ட சிலருக்கும் செனோய் அறிக்கையை நடைமுறைப்படுத்தும் அதேநேரம் ஆசியான் அமைப்பில் இணைந்துகொள்ளுமாறும் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இருப்பினும் துரதிஷ்டவசமாக அப்போதைய வெளிவிகார அமைச்சராக செயற்பட்ட டட்லி சேனநாயக்கவிற்கு அமைச்சின் திறைசேரியின் அதிகாரிகள் பொருளாதாரத்தை திறக்கும் முயற்சிகள் பாதமாக முடியும் என்று எச்சரிக்கை விடுத்திருந்ததோடு, அணிசேரா நாடுகள் அமைப்பின் அனுமதி கிடைக்காத காரணத்தினால் ஆசியான் அமைப்பில் இணைய வேண்டாம் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எவ்வாறாயினும் 56 வருடங்களுக்கு பின்னர் நாம் ஆசியான் அமைப்பில் இருக்கின்றோம். ஆசியான் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் பலவும் தற்போது மேம்பாட்டை அடைந்துள்ளன. நாம் 1970 களில் சமூக பொருளாதார முறைமைக்கு மாறினோம். எமது மூலதனவழிமுறைகளை மிதித்து தள்ளிவிட்டே முன்னேறிச் சென்றோம். அந்த பொருளாதார கெடுபிடிகளிலிருந்து இன்னும் மீளவில்லை.

தற்காலத்தில் உங்களுடைய அமைப்பானது உலகின் 5 - 4 ஆவது அமைப்பாக வளர்ச்சி அடையக்கூடிய பொருளாதார பலத்தை கொண்டிருக்கிறது. 55 வருடங்களின் பின்னர் நாம் வங்குரோத்து நிலையில் இருக்கிறோம். இதுவே நாம் வருந்துவதற்கான காரணமாகும்.

எவ்வாறாயினும்வங்குரோத்து நிலையை தற்போது முழுமையாக எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளோம். தற்போது நாம் துரித கதியில் முன்னேற்றத்தை நோக்கி நகரப்போகிறோம். அதன் போது ஆசியான்அமைப்பின்பயணத்தை முன்னுதாரணமாக கொள்வோம். ஆசியான் அமைப்புடன் மிக நெருக்கமாக செயற்படவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதுவே எனது ஆட்சியின் கொள்கையாகும். ஏனைய ஆட்சியாளர்களின் கொள்கையும் அதுவாகவே இருக்கும் என நம்புகிறேன். தென்கிழக்காசியாவுடன்எமக்குஉள்ளதொடர்புகள் மிகவும் வலுவானது. இந்தியா மற்றும் மாலைத்தீவு தவிர்ந்த தென்கிழக்காசியாவுடன் மிகவும் நெருக்கமானநாடாகஇலங்கையே உள்ளது. மியன்மார், தாய்லாந்து போன்ற நாடுகளைப் பாருங்கள்.

மகாவிகாரைபௌத்தமத கற்பித்தல் செயற்பாடுகளுடன் லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பகுதிகளுடன் நாம் கொண்டுள்ள நெருங்கிய தொடர்புகளையும், நாடுகளுக்கிடையிலான நீண்டகாலமாக நடந்துள்ள செயற்பாடுகள்தொடர்பில்பாருங்கள். மலாய்இனத்தவர்கள்இலங்கைக்கு வருகைதந்துள்ளனர். அநுராதபுரம் ராஜதானியில் ஸ்ரீ விஜய அரசனின் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட தொடர்புகள் முக்கியமான மைற்கல்லாகும்.

எமது நாடுகள் மத்தியில் கடந்த காலங்களில் காணப்பட்ட தொடர்புகள் மேற்படிவிடயங்களின் ஊடாக வெளிப்படுகின்றன. நாம் எமது கலாசார, பொருளாதார, அரசியல் தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதனாலேயேபிரதமராக பதவி வகித்த காலத்தில் மிகவும் அவசியமாகக் காணப்பட்ட சிங்கப்பூருடன் சுந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைசாத்திட்டேன். அதனை நாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டியுள்ளது.

அதேபோல் தாய்லாந்து உள்ளிட்ட ஏனைய ஆசியான் அமைப்புநாடுகளுடனும்அதனை விரிவுபடுத்த நாம் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். அதேபோல் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவு (RCEP) அமைப்பிலும் இணைந்துகொள்ள இலங்கைதீர்மானித்துள்ளது. அதில் சீனா, ஜப்பான், தென்கொரியா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. உலகின் பலமான நாடுகள்தொகுதியொன்றும்அங்கத்துவமும் வகிக்கிறது. பிராந்தியத்தில் வேறு எந்தவொரு நாடும் இதற்காகவிண்ணப்பிக்கவில்லை. இருப்பினும் இலங்கை அந்த அமைப்புடன் இணைந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் நிறைவுற்ற பின்னர் RCEP அமைப்பில் இணைந்துகொள்ள எதிர்பார்த்திருப்பதோடு, ஆசியான்அமைப்பின் ஏனைய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை கைசாத்திடுவது தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளது.

இதுவே ஆசியான் அமைப்பிற்குள் நாம் நுழைவதற்கான சிறந்த வழிமுறையாக காணப்படுகிறது. ஆசியான் அமைப்பின் அழைப்பினை நாம் புறக்கணித்ததால் அதனில் இணைந்துகொள்ள முடியாமல் போனது. தற்போது பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவுடன் (RCEP) இணைந்துகொள்ள வேண்டிய தேவை எமக்கு உள்ளது.அதனை புறக்கணிப்பதற்கான அவசியங்கள் எவையும் இல்லை.

நாம் கிழக்குடன் இணைந்து பொருளாதாரத்தை நோக்க வேண்டும்.கிழக்குதான்அபிவிருத்தி அடைந்துவருகிறது. பிராந்தியபரந்த பொருளாதார கூட்டிணைவுடன் (RCEP) ஒப்பந்தத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தும் அதேநேரம், இந்தியா மற்றும் பங்களாதேஷ் உடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள பிராந் தியத்திலிருந்து, கிழக்கில் ஜப்பான் வரையிலான அனைத்து நாடுகளுடனும் மேலும் நெருக்கமான உறவுகளை உருவாக்க இது உதவுகிறது.

நாம்பின்பற்றும்பொருளாதார மற்றும் அரசியல் மூலோபாயம் இதுவாகும். மேலும் அரசியல் ரீதியாகமிகநெருக்கமானஉறவுகளை வைத்திருப்பது மிகவும் அவசியம்.

அமைச்சுகள்மட்டத்தில்இந்தத் தொடர்பாடல் இணைப்புகளைப் பேணுவதை உறுதிப்படுத்துமாறு எமது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அறிவுறுத்தினேன்.

மேலும், இந்த சூழ்நிலைகள் குறித்து எப்போதும் அவதானம் செலுத்தி, அடிக்கடி சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தி, பிரச்சினைகள் இருந்தால், அவற்றைத் தீர்த்து, முன்னோக்கிச் செல்லத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நான் அவர்களுக்கு அறிவுறுத்தினேன்.

எம்மால் மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது. நாம் முன்னோக்கியே செல்ல வேண்டும். தற்போதைய சர்வதேச நிலைமை குறித்தும் நாம் அவதானம் செலுத்தி வருகிறோம். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் ஆசியான் அமைப்பின் எதிர்காலகண்ணோட்டத்துடன்நாம் உடன்படுகிறோம். அந்த நோக்கை முன்னெடுத்துச் செல்வதற்கும் அதற்கேற்ப முன்னோக்கிச் செல்வதற்கும் நாங்கள் முழு ஆதரவை வழங்குகிறோம்.

கடல்சார் மையம் என்ற வகையில் இந்தோனேசியாவுக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம். நாம் அதிலிருந்து விலகிச் செல்லவில்லை. இந்த நெருக்கடிகளை முறியடிக்க நாம் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம். ஆசியான் அமைப்பின் நோக்கானது, இந்து சமுத்திர பிராந்தியத்தை ஒரு முனையாகவும், பசுபிக் சமுத்திர பிராந்தியத்தைமறுமுனையாகவும் அடையாளப்படுத்தியுள்ளது.

நாம் இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு நாடு என்ற வகையில் அதனை இராணுவத் தலையீடுகள் அற்ற பிராந்தியமாக முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்று உறுதி செய்ய எம்மால் முடியும்.

எனவே,ஆசியான்அமைப்பின் நோக்கும், உறுப்பினர்களாகிய எமது பார்வையும் இலக்குகளும் ஒன்றாகவே இருக்கின்றது. இந்தப் பரிந்துரையை ஆதரிக்க அனைத்துத் துறைகளிலும் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இந்தப் பெரும் சமுத்திரத்தில் நாமும் ஆசியான் நாடுகளும் சிறிய மீன்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சிறிய மீன்களாக, நாம் பிரிந்திருக்கும் போது எம்மைப் பிடிக்க மிகவும் எளிது. எனவே, அனைவருடனும்தொடர்புவைத்திருத்தல் அனைவருடனும் நட்புறவு கொள்வது மிகவும் அவசியம். உங்களை முந்திச் செல்வதற்கோ, உங்களைப் பின்னால் நிறுத்துவதற்கோ எங்களுக்குப் எவ்வித போட்டியும் இல்லை என்று கூற வேண்டும்.காலநிலை மாற்றம் தொடர்பிலும் நாம் இணைந்து செயல்பட வேண்டும்.

காலநிலை நிகழ்ச்சி நிரலை அவசரமாக அமுல்படுத்துவது தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அழைப்பின் படி காலநிலை மாற்ற நெருக்கடியின் தீவிரத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

காலநிலை நிகழ்ச்சி நிரல் தொடர்பில் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். மேலும், நீலப் பொருளாதாரத்தின் ஆற்றலை உணர்ந்து, ஆசியான் அமைப்பின் பிற நாடுகளும், இலங்கையும் காலநிலை நிகழ்ச்சி நிரலில் இணைந்து செயல்பட முடியும்.எனவே நாம் இணைந்து செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள் அதிகம் உள்ளன. அதில் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

எனவே, நாம் ஆசியான் அமைப்போடு கைகோர்த்து செயல்பட வேண் டியுள்ளது- என்றார்.

## பயன்பாடற்றுக் கிடக்கும்

# பெருந்தோட்ட நிலங்களை அரசுடமையாக்க வலியுறுத்து

பெருந்தோட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படாத நிலங்களை மீண்டும் அரசுடமையாக்கும் கோரிக்கையை மலையக அரசியல் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் என பெருந்தோட்டத்துறைஅபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பதிரண சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

இந்திய வம்சாவளியினராக வாழும் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச் சினைகள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளமை காலத்துக்கேற்றதாகும். பெருந்தோட்ட மக்கள் எதிர் கொள்ளும் துயரங்களை நாடு மற்றும் தேசியம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது மிகவும் கவலைக்குரியதொரு நிலையாகும்.

200 ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியை கொண்டுள்ள பெருந்தோட்ட மக்கள் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு ஆரம்ப காலத்தில் இருந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

இதற்குபெருந்தோட்டத்துறை அமைச்சர் என்ற ரீதியிலும், இலங்கை பிரஜை என்ற ரீதியிலும் பெருந்தோட்டத்துறை மக்களுக்கு கௌரவத்தை தெரிவித்துக்கொள்கிறேன். பெருந்தோட்ட மக்கள் மத்தியில் சுகாதாரம், உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதற்கு ஆட்சியில் இருந்த சகலரும் பொறுப்புக்கூற வேண்டும்.

தோட்ட தொழிலாளர்கள் காலையில் தேயிலையை வணங்கி தமது தொழிலை ஆரம்பிக்கிறார்கள். இவர்கள் தமது தொழிலை நேர்மையாக மேற்கொள்கிறார்கள். பெருந்தோட்ட மக்களுக்கு குடியுரிமை பெற்றுக்கொடுக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.பிற்பட்ட காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பெருந்தோட்ட பகுதிகளில் தோட்ட கம்பனிகளை அடிப்படையாக கொண்டு பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. 50 வருடகாலமாக தோட்ட கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்கள் காணப்படுகின்றன. பலவீனமாக வரி ஒப்பந் தத்துக்கு அமைய வே தோட்ட கம்பனிகள் செயற்படுகின்றன பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணநடவடிக்கைஎடுக்கும்போது தோட்ட கம்பனிகள் இணக்கப்பாடற்ற தன்மையில்தான் செயற்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருந்தோட்ட பகுதிகளில் பாவனைக்குபயன்படுத்தப்படாத நிலங்களை மீண்டும் அரசுடமையாக்குவதற்கு அமைச்சரவை அனுமதியைபெற்றுக்கொண்டார். இருப்பினும் பல்வேறு தடைகளினால் அது சாத்திய மற்றதாகிறது. மலையக அரசியல் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எதிர்வரும் வாரம் விசேட பேச்சு இடம்பெறவுள்ளது. இதன்போது பெருந்தோட்ட மக்களுக்காக காணிகளை பெற்றுக்கொள்ளும் கோரிக் கையை பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண் டும் என்பதை தயவுடன் வலியுறுத்துகிறேன்.

பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேச்சஸ் காணிகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரச மற்றும் ஏனைய வழிமுறைகளில் நிதி பெற்று பெருந்தோட்ட தமிழ் மக்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களுக்கு உரியநியாயம்மற்றும்உரிமைகள் வழங்கப்படவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு இரு தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் நாளாந்த கொடுப்பனவு வழங்க எமது ஆட்சியில் எடுத்த தீர்மானத்தை தோட்ட கம்பனிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் கடுமையான சிரமங்களுக்கு மத்தியில் அந்த 1000 ரூபாய் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இருப்பினும் இந்த 1000 ரூபாய் தற்போது போதுமானதாக இல்லை. பெருந்தோட்ட பகுதியில் பல்லாயிரம் ஹெக்டேயர் காணிகள் பயன்படுத்தாமல் காடாக்கப்பட்டுள்ளது. இதனால் பெருந்தோட்ட தொழிற்றுறை பாதிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களை தொடர்ந்து தோட்டங்களுக்குள் வைத்துக்கொள்ள முடியாது. அவர்களை ஏனைய சமூகத்தினரை போல வாழ வைக்க வேண்டும்.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் பெருந்தோட்ட பகுதிகளில் கல்வித்துறை போதுமான அளவு முன்னேற்றமடையவில்லை. அப்பிரதேச மக்கள் சுகாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். பெருந்தோட்டத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சட்ட ரீதியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் -என்றார்.



# முதலிட இதுவே சரியான நேரம் என்கிறார் நிதி ராஜாங்க அமைச்சர்

இலங்கை முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சென்னையில் நடைபெற்ற இலங்கையில் முதலிடுங்கள் ('Invest Sri Lanka') மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு ஆட்சியாளர்கள் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு வரும் இந்தத் தருணத்தில் முதலீட்டாளர்கள் இலங்கைச் சந்தையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இலங்கை கடன் மறுசீரமைப்பு செயன்முறையை இந்த ஆண்டின் இறுதி காலாண்டுக்குள் நிறைவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

அத்துடன், பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பு பலவீனங்களை சரிசெய்வதற்காக ஆழமான பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதன்மூலம்இலங்கை பலப்படுத்தப்படும்

நுண் பொருளாதார ஸ்திரமின்மைக்கான முக்கிய காரணங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின்விரிவானபொருளாதார பங்காளித்துவத்தில் இணையும்முயற்சியில்இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகியநாடுகளுடன்இலங்கை பேச்சில் ஈடுபட்டுள்ளது - என்றார் .

காலைக்கதிர் Kalaikkathir

## சபாநாயகரின்...

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

அதற்குரியஉறுப்புரைஎன்ன? முடியுமானால் காட்டுங்கள். நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பாகவே நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். அதனால்ஆட்சியாளர்கள் திட்டமிட்டே இதனை செய்தார்கள். அதனால்சபாநாயகரின் இந்த தீர்ப்பு நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு பெரும் அடியாகும் - என்றார்.

**அநுரகுமார திஸாநாயக்க**

அவரைத் தொடர்ந்து எழுந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, உயர்நீதிமன்றத்தில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு அறிவிப்பை அடுத்து ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாகவே சபாநாயகர்தனதுஅறிவிப்பை விடுத்தார்.

இந்தச்செயற்பாடானது, நீதித்துறையின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு சமனானதாகும். ஆகவேஇந்த தீர்ப்பினை அறிவித்தமையானது சபாநாயகர் தனது பக்கச்சார்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும், சபாநாயகர் ஆசனத்தில் அமரும் ஒருவர் அபிமானத்தினைப் பாதுகாப்பவராக இருக்க வேண்டும். பக்கச்சார்பாக செயற்படுவதானது கௌரமற்ற செயற்பாடாகும் அத்துடன், வரலாற்றிலும் தவறான பதிவே ஏற்படும் - என்றார்.

# இளைஞரால் பாலியல் தொல்லை; உயிரை மாய்க்க முயன்ற சிறுமி

யாழில் இளைஞரின் பாலியல்தொல்லையால் மன உளைச்சலுக்கு உள்ளான 12 வயதான சிறுமியொருவர் தனது உயிரை மாய்க்க முற்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தசிலதினங்களுக்கு முன்னர் குறித்த சிறுமி தனது உயிரை மாய்க்க முயன்றநிலையில்குடும்பத்தினரால் காப்பாற்றப்பட்டு , சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் விசாரணையில் 'தனக்கு 21 வயதுடைய இளைஞன் ஒருவர் தொலைபேசி ஊடாக ஆபாச குறுஞ்செய்களை தொடர்சியாகஅனுப்பிவந்துள்ளார் எனவும், தவறான தொடுகைகள்மூலம்பாலியல் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் எனவும், இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான நிலையிலேயே உயிரை மாய்க்க முயன்றதாகவும்' குறித்த சிறுமி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (05)

# நல்லூரில் பாதுகாப்புக்காக இம்முறை 50 கெமராக்கள்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளநிலையில், இறுதிக்கட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர சபையில் கலந்துரையாடப்பட்டது.

இந்நக் கலந்துரையாடல் வெள்ளிக் கிழமை யாழ் மாநகர சபையில், மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது , எதிர்வரும் 19 ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்படவுள்ளதாகவும், வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 'வெள்ளை வர்ணக் கொடிகளால்எல்லையிடப்படும்வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

ட்ரோன் கமெராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளதுடன் கண்காணிப்பு சுமார் 50 கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன்வாகனத்தரிப்பிடகட்டணங்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை சார் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

# புத்தூரில் குமரகுருபரன் விளையாட்டரங்கு திறப்பு

புத்தூர்ஸ்ரீகுமரகுருபரன் சனசமூக நிலையத்தின் விளையாட்டரங்க திறப்புவிழா புதன்கிழமை மாலை குமரகுருபரன்மைதானத்தில் வெகு சிறப்புற நடைபெற்றது.

ஸ்ரீகுமரகுருபரன் சனசமூக நிலையத்தின் கனடா கிளையின் நிதிப் பங்களிப்பு முயற்சியின் வாயிலாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டு அந்தக் காணியில் கந்தர் ஐயாத்துரை மற்றும் ஐயாத்துரை அன்னப்பிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்த விளையாட்டு அரங்கு அமைக்கப்பட்டு அவை உத்தியோகபூர்வமாக சன சமூகநிலையம் மற்றும் விளையாட்டுக் கழகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வுகளில் விருந்தினர் வரிசையில் - பிரதம விருந்தினராக ஓய்வுநிலை வைத்திய அதிகாரி திருமதி இரவீந்திர வசந்தமாலாவும் சிறப்பு விருந்தினர்களாக புத்தூர்சோமஸ்கந்தக்கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், யாழ்.போதனா வைத்தியசலையின் வைத்திய கலாநிதி இராசரத்தினம் துஷிந்தன், பொது சுகாதார பரிசோதகர் அனுதர்சன் ஆகியோரும் புலம்பெயர் உறவுகளில் இருந்து புத்தூர் குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் கனடா கிளை சார்பாக அதன் தலைவர் செல்லப்பா சிவராஜா மற்றும் நிர்வாகக் குழுசார்பாக செல்லையாசோதிநாதன்,இராதுரை சிவசம்பு ஆகியோரும் கலந்து கொண்டனர். சனசமூகநிலையத்தின்புதியவிளையாட்டரங்கில்கலைநிகழ்வுகள்மைதான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றதுடன் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வடக்கு ஆளுநரைச் சந்தித்த ஆஸி. பாதுகாப்புப் படையினர்

வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்று ஆஸ்திரேலியப் எல்லைப்பாதுகாப்பு படையின் முதனிலை செயலாளர் பிராண்ட் இசண்ட மற்றும் அவர்களின் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றதோடு இதில் இலங்கை சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பில் எல்லைப்பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத பயணங்கள், கடல் எல்லைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டன.





அத்துடன் இலங்கை சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஆஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு படை பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் ஆஸ்திரேலியப் படையினர் தெரிவித்துள்ளார்.

இதன்போது வடமாகாணத்திலிருந்து பலாலி விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நேரடியாக பிரயாணம் நடைபெறுவதாலும் இந்தியா இலங்கை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதாலும் சுங்கத்திணைக்களங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (05)

# ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்தது மலையக மக்கள் மீதான அக்கறையினாலா?

## முற்போக்கு முன்னணியிடம் ஜீவன் தொண்டமான் கேள்வி

மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கலந்துரையாடுவதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியே உங்கள் எல்லோரையும் (தமிழ் முற்போக்கு கூட்டணி) அழைத்தபோது நீங்கள் நிராகரித்து விட்டு உங்கள் கட்சி நிகழ்வுக்கு செல்வது மலையக மக்கள் மீதான அக்கறையிலா என தமிழ் முற்போக்கு கூட்டணியினரிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கேள்வி எழுப்பினார்.

நடாளுமன்றத்தில் வியாழக் கிழமை இடம்பெற்ற மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பானசபைஒத்திவைப்புவேளை பிரேரணைமீதானவிவாதத்தில் தமிழ் முற்போக்குகூட்டணியின்எம்.பி.யான உதயகுமார் உரையாற்றிய போது முன் வைத்த குற்றச் சாட்டுகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் விளக்கமளித்துக் கொண்டிருந்தார்.

அதன்போது மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சபையில் விவாதம் நடக்கும் போது சம்பந்தப்பட்டஅமைச்சர்களோஏனைய அமைச்சர்களோ சபையில் இல்லை என்ற குற்றச்சாட்டை ஏற்கனவே உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான எம்.பி.க்கள் முன்வைத்திருந்த நிலையில் உதயகுமார் எம்.பி.யும் அந்தக் கருத்தை முன் வைத்தார்.

அப்போதுஎழுந்தஅமைச்சர்ஜீவன் தொண்டமான், "நான் உங்களுக்கு இனி குறுக்கீடு செய்யமாட்டேன். ஆனால் எனது இந்தக் கேள்விக்கு மட்டும் பதிலளியுங்கள். அதாவது மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசும் போது சபையில் அமைச்சர்கள் இல்லை .எனவே அமைச்சர்களுக்கு மலையக மக்கள் மீது அக்கறையில்லை என்பதுதானே உங்கள் குற்றச்சாட்டு அதாவது அமைச்சர்கள் தமது வேறு வேலைகளை கவனிக்க சென்றுவிட்டார்கள் என்றுதானே கூறுகின்றீர்கள்.

அப்படியானால் மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில்வெள்ளிக்கிழமை(11)கலந்துரையாடுவதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியே உங்கள் எல்லோரையும்வருமாறு அழைப்பு விடுத்தபோது நீங்கள் உங்கள்கட்சியின்நிகழ்வொன்றுக்காக அந்த அழைப்பை நிராகரித்து ஒத்திவைத்தது மட்டும் மலையக மக்கள் மீதான அக்கறையிலா எனக்கேட்கிறேன்" என்றார்.

இதற்கு பதிலளித்த உதயகுமார் எம்.பி, இதற்கும் இதற்கும் முடிச்சு போடவேண்டாம். காலையில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மட்டும்தான் இங்கிருந்தார். அதற்கு பின்னர் அவரும் இல்லை. தற்போது நீங்கள் இருக்கின்றீர்கள். ஜனாதிபதியின் செயற்பாடுகள் எங்களுக்கு தெரியும்.

தற்போது எனக்குள்ளது குறுகிய நேரம். அதில் நான் இந்த விடயங்களை பேச விரும்பவில்லை ஏனென்றால் மலையக மக்கள் இந்த பிரேரணையைபெரிதும்எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பிரச்சினைகளை நான் வெளிக்கொண்டு வர வேண்டும் எனக்கூறி உரையை நிறைவு செய்தார்.

# கடந்த காலத்தைவிட மொட்டு இப்போது பலமாகவே உள்ளது

## இப்படிச் சொல்கிறார் ரஞ்சித் பண்டார எம்.பி.



மொட்டுக்கட்சியின் கதை முடிந்து விட்டது என பலர் கூறினர், ஆனால் அரசியல்அமைப்பாககடந்தகாலத்தைவிட தற்போதுபலமாகஇருக்கின்றோம். ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராகவே இருக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கட்சி தற்போது சவால்களை எதிர்நோக்கலாம். அதேபோல் கொள்கை ரீதியாகவும் அரசியல் பயன்பாடு மூலம் மக்களின் ஈர்ப்பை பெற்றுள்ள கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் முன்பை விட பெருமையும் கௌரவமும் எமக்கு இருக்கின்றது.

மொட்டுக்கட்சியின் கதை முடிந்து விட்டது என பலர் கூறினர், ஆனால் அரசியல் அமைப்பாக கடந்த காலத்தை விட தற்போது பலமாக இருக்கின்றோம்.

குறுகிய காலத்தில நாடு முழுவதும் நாங்கள் எமது அடையாளத்தை நிலை நிறுத்தி விட்டோம் என்பதை பலரும் மறந்து விட்டனர். எமக்கு நாடு முழுவதிலும்ஒருங்கிணைப்பு ரீதியான வலையமைப்பு இருக்கின்றது.

கடந்தஆறுவாரங்களில் நாடு முழுவதிலும் எமது கட்சியின் கூட்டங்களை நடத்தினோம். நாங்கள் பேருந்துகளை பயன்படுத்தி மக்களை அழைத்துச் செல்லவில்லை.

இயற்கையாகவேஎமது வேலைத்திட்டங்களால் மக்களை கவரமுடிந்தது. அதேபோல் நாட்டை பாதுகாத்த தலைமைத்துவதற்கான உரிமை பொதுஜன பெரமுனவுக்கு மட்டுமே இருக்கின்றது.

மக்களின் படுகொலைகளுடன் பொதுஜன பெரமுனவுக்கு தொடர்பு இருக்கின்றது என்று எவராலும் கூற முடியாது. போராட்டங்களுடன், மக்களை தூண்டிவிடும் சம்பவங்களுடன் தொடர்புள்ளது என்றும் எவரும் கூற முடியாது.

மகாந்தமாகாந்தி நம்பியது போன்று எமது கட்சியின் ஆயுதம் அகிம்சை. எனினும் இந்த அரசியலில் ஆழமும் அகலமும் நீளமும் தெரியாத சிலர் தம்மை தேசிய தலைவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள பொது ஜன பெரமுன தயாராகவே இருக்கின்றது. ஜனாதிபதி தேர்தல் அல்ல எந்தத் தேர்தலாக இருந்தாலும்பொதுஜன பெரமுனவே வெற்றி பெறும். மக்களின் இறையாண்மை எமது கட்சியிடமே இருக்கின்றது - என்றார்.

# பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரை சந்தித்த செந்தில் தொண்டமான்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரீக் எம்டி அரிஃபுல் இஸ்லாம் ஆகியோருக்கும் இடையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆளுநர் செயலகத்தில் நட்பு ரீதியான சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன்,நினைவு சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# வறட்சிக் காலநிலையால் பரவி வரும் எலிகாய்ச்சல்

வறட்சியான காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல்பரவும்அபாயம்காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்தநீருடன்காணப்படும்ஏரிகளுக்கு மீன்பிடிப்பதற்கும், குளிப்பதற்கும் மக்கள் வருவதால் இவ்வாறு எலிக்காய்ச்சல் அதிகம் பரவும் ஆபத்து காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, குருநாகல் கனேவத்த மகுல்வெள கிராமத்தைச் சேர்ந்த இருவர் எலிக்காய்ச்சலால் கடந்த 9 ஆம் திகதி உயிரிழந்துள்ளனர். 38 மற்றும் 39 வயதுடைய குறித்த நபர்களே அப்பகுதியிலுள்ள கிரிந்திவெல்மட குளத்தில் நீராடும்போது சுகவீனமடைந்தனர் எனத் தெரிவிக்ககப்படுகின்றது.

மேலும், மகுல்வெள பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 12 பேர் காய்ச்சலால் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2023இல் வெளியிடப்பெற்றது.